Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 309 ஆனி. June. 2022




# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

# 'எல்லா வேலையும் கொஞ்சம் தெரிந்தவன் ஆனால் ஒன்றிலும் நிபுணன் இல்லை'

கனகசபேசன் அகிலன் – இங்கிலாந்து




## லண்டனில் மலையக இலக்கிய மாநாடு– 2022


கோகிலம் சுப்பையா அரங்கு


இர சிவலிங்கம் அரங்கு


தமிழோவியன் அரங்கு


சாரல்நாடன் அரங்கு


சோ.சந்திரசேகரம் அரங்கு


சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு

## குவேனியின் சாபம்

பிரியா இராமநாதன்– இலங்கை



## மில்க்வைற் சோப் ஏழைகளின் தோழனாகவும் மத்திய வர்க்கத்தின் காவலனாகவும் விளங்கியது.

கானா பிரபா – அவுஸ்ரேலியா

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி








# காப்பி அடித்து கோப்பி போட வேண்டாம்




● மாதவி

ஒருவரை ஒருவர் ஒப்பீடு செய்து கதைப்பது, தமிழர்களின் சுபாவம். அது சிறுவயதில் நாம் படிக்கும் காலத்திலே ஆரம்பித்துவிடும். அவனைப்பார் கணிதத்திற்கு 90 புள்ளி எடுத்திருக்கிறான், நீ கணித வாத்தியார் மகன் 68 புள்ளி, ஒரு வாரம் வீட்டில் அறப்போர், கதையே ஏதும், இருக்காது.

இன்று தமிழ் கடைகளுக்கு போனால் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், வாடிக்கையாளர்கள் உள்ளுக்குள் குசு குசுப்பார்கள், அந்தக்கடையில் பருப்பு 20 சதம் குறைவு, இந்தக்கடையில் ஏன் இங்கு இப்படி என்று ஒருவருக்குள் ஒருவர் கதைப்பார்கள். எந்தக்கடை என்பதை இன்னும் அடித்தொனியில் தனக்கும் கேட்காமல் சொல்வார்கள். இது எமது இயல்பு. சிலவற்றை நாம் வெளியாகப் பேசமாட்டோம். அது அநாகரீகம் என எண்ணுவோம்.

ஆனால் இன்று இங்கிலாந்து தேசத்தில் சில பெரும் கடைகளில் (Sainsbury,Tesco,) சில பொருட்களுக்கு அருகில் இது அல்டி (Aldi) விலையை ஒத்தது, இது லிடில் (lidl) விலையை ஒத்தது, எனவே அங்கு செல்லத் தேவையில்லை, இங்கேயும் அதே



விலைதான் என்ற பொருள் பட சிறு பதாதைகள் கடைகளுக்குள் போட்டு இருக்கும். இப்படி போடுவது முன்பு அநாகரீகமான செயல். அல்லது வேறுகடையின் பெயரை ஒப்பீட்டுக்கு என்றாலும் பாவிப்பது குற்றம் என்று கூட இருந்து இருக்கலாம்.

இன்று உண்மை என்றால் உரைப்பது தவறு இல்லை, அது வாடிக்கையாளர் அங்கு மலிவு, இங்கு மலிவு, என்று அலையாமல் ஒரு இடத்தில் இலகுவாக வாங்கிச் செல்ல உதவும் செயலாக இங்கிலாந்து மக்கள் பார்க்கிறார்கள்.

நிச்சயமாக இப்படி தமிழர்கள் மத்தியில் அதாவது தமிழ்க்கடைகள், ஒன்றை ஒன்று ஒப்பீடு செய்து பகிரங்கமாகப் பதாதை வைப்பது இல்லை. அது அநாகரீகமான செயலாகவே இன்றுவரை உள்ளது. அதேநேரம், இன்னும் ஒரு காரணம், எமது வியாபார ஸ்தாபனங்கள் பெரும் நிறுவனமயமாக்கப்படவில்லை .

இது மட்டுமல்ல அன்று ஒரு உணவகத்திற்கு பக்கத்தில் இன்னும் ஒரு உணவகம் போடுவது நாகரீகம் அல்ல. போடவும் மாட்டார்கள். அப்படிப் போடவும், நகரசபை அனுமதிக்காது, ஆனால் இப்போது ஸ்பெயின் நாட்டில் இருகதவுகள் பக்கம் பக்கம் உடைய ஒரு கடையில்,ஒரு கதவைத் திறந்தால்





26 ஆம் பக்கம் பார்க்க...




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 309



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333

+49 01631992333


e-mail: vettimaniy@hotmail.com



"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# தன்னைப் பலப்படுத்தும் ரணிலின் உபாயங்கள்



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

ரணில் விக்கிரமசிங்க அவசரமாக பிரதமராக பதவியேற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும், அமைச்சரவையை அமைப்பதில் தாமதத்தைக் காணமுடிகின்றது. புதிய இடைக்கால அமைச்சரவையில் 20 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (20) வரையில் 13 பேர் மட்டுமே அமைச்சர்களாகப் பதவியேற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் 11 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்பார்கள் எனச் சொல்லப்பட்டுள்ள நிலையில், அதற்கான திரைமறைவுப் பேரங்கள் இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் நிலையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

தற்போது வரையில் பதவியேற்றுள்ள 13 அமைச்சர்களில் ஒன்பது பேர் கடந்த வெள்ளிக்கிழமைதான் பதவியேற்றார்கள். இந்த அமைச்சரவைப் பதவியேற்பில் கவனிக்கத்தக்க விடயம் இரண்டு எதிர்க்கட்சிகளில் பிளவை ஏற்படுத்தியிருக்கின்றார் ரணில். கட்சிகளைப் பிளவுபடுத்தும் தனது வழமையான உபாயத்தை ரணில் மீண்டும் கைகளில் எடுத்திருக்கின்றார். ஐ.தே.க. சார்பில் ஒரேயொரு உறுப்பினராக பாராளுமன்றம் வந்த ரணிலைப் பொறுத்தவரையில் இவ்வாறு எதிரணிகளைப் பிளவுபடுத்தும் உபாயம் வழமையானதுதான். அவருக்கு அது தவிர்க்க முடியாதததும்கூட!

பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் கூட்டத்தில் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ள நிலையில், அதிலிருந்து இருவரை களட்டியெடுத்து அமைச்சர் பதவிகளைக் கொடுப்பதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருக்கின்றார். ஐக்கிய மக்கள் சக்தியில் உயிர்த்துடிப்புடன் செயற்பட்டுக்கொண்டிருந்த ஹரின் பெர்னான்டோ, மனுச நாணயக்கார ஆகியோரையே ரணில் தனது பக்கத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றார். இதன் மூலம் ரணிலுக்கு சவால் விட்டு ஐ.தே.க.விலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்த சஜித்துக்கு நெத்தியடி கொடுத்துள்ளார் ரணில். ஐக்கிய மக்கள் சக்தியில் பிளவையும் ஏற்படுத்தியுள்ளார்.

மறுபுறத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசுக்கு ஆதரவளிப்பதெனவும், ஆனால் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்வதில்லை எனவும் தீர்மானித்திருந்தது. மைத்திரிபால ஜனாதிபதியாக இருந்தபோது ரணிலை அவர் படுத்தியபாடு அனைவருக்கும் தெரியும். அதனை மனதில் வைத்து ரணில் பழிவாங்கலாம் என்ற அச்சம் மைத்திரிக்கும் இருந்திருக்கலாம். அதனைவிட ரணிலுக்கு கீழ் ஒரு அமைச்சராகப் பதவியேற்பதும் அவருக்கு கௌரவப் பிரச்சினையாக இருந்திருக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவுக்கு அவை காரணமாக இருந்திருக்கலாம்.

இந்தப் பின்னணியில் சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வா ஒரு அமைச்சராக பதவியேற்றுக் கொண்டிருக்கின்றார். நிமால் சிறிபால டி சில்வா எப்போதும் அமைச்சர் பதவிக்காக அலைபவர் என்பது அனைவருக்கும் தெரியும். அவரைவிட சுதந்திரக் கட்சியின் முக்கிய பொறுப்பில் உள்ள சுசில் பிரேமஜயந்தவும் அமைச்சராகியிருக்கின்றார். கோட்டாபய அரசாங்கத்தில் சுசில் பிரேமஜயந்த ஒரு இராஜாங்க அமைச்சராக இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சித்தார். அதனால், அமைச்சர் பதவியிலிருந்து அவர் தூக்கி எறியப்பட்டார். இப்போது அவருக்கு கபினட் அந்தஸ்த்துள்ள ஒரு அமைச்சர் பதவியை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் கோட்டாபய அதனைக் கொடுத்துள்ளார்.

ஏற்கனவே பலவீனப்பட்டுப்போயிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு பிளவை இது ஏற்படுத்தியிருக்கின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் நாடாளுமன்றத்தில் தன்னுடைய சீற்றத்தை வெளிப்படுத்தி மைத்திரிபால சிறிசேன உரையாற்றியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறினார்கள் என இவர்களும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்படலாம். இதன்மூலம் முக்கிய இருவரை மைத்திரி இழக்கவேண்டிவரும். அதுவும் ரணிலுக்குத்தான் பலத்தைக்கொடுக்கும்.

இவற்றைவிட அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டிருப்பவர்களில் மற்றொரு முக்கியமானவர் விஜயதாச ராஜபக்ச. அவருக்கு நீதி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலின் போது மொட்டுவில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அவர் அமைச்சரவைப் பதவியேற்புக்காகச் சென்று கொண்டிருந்தபோது அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. கபினட் அந்தஸ்த்துள்ள அமைச்சு அல்ல. இராஜாங்க அமைச்சே அவருக்கு காத்துக்கொண்டிருக்கின்றது என்பதுதான் அந்தச் செய்தி. உடனடியாகவே அதனை அவமானமாகக் கருதி ஏற்கமறுத்து திருப்பிவிட்ட விஜயதாச அன்று முதல் கோட்டாவுக்கு எதிராக செயற்படத் தொடங்கினார். இப்போது அவருக்கு கபினட் அந்தஸ்த்துள்ள அதுவும் நீதி அமைச்சை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் கோட்டாபயவுக்கு.

இவை அனைத்தும் ரணில் பலம் பெற்று வருகின்றார் என்பதையும் ஜனாதிபதியாக இருந்தாலும், நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாதளவுக்கு கோட்டாபய இருக்கின்றார் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. தொடர்ந்துகொண்டிருக்கும் கோட்டா கோ ஹோம் போராட்டத்தின் பிரதிபலிப்புத்தான் இது. தன்னைப் பலப்படுத்தவும் கோட்டாவைப் பலவீனப்படுத்தவும் ■

29 ஆம் பக்கம் பார்க்க...




Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main

# இந்த ஆமதுருகளை பன்சலைக்கு அனுப்புங்கள்

## அரசியலில் இச்சபைக்கு இவர்கள் வேண்டாம்!!!

"இந்த தீவைப்பு தமிழர்களாகிய எங்களுக்கு புதிதல்ல. 1983 எங்கள் ஹவ்லக் வீதி வீட்டை கொளுத்தினார்கள். எங்கள் புறக்கோட்டை வியாபார நிலையத்தை கொளுத்தினார்கள். ஒரு கம்பீரமான சினிமா கலைஞரான என் தந்தை அதன் பின் மனமுடைந்து சில காலம் வாழ்ந்து இறந்து போனார்."

"இதோ இந்த ஆசனத்தில்தான் என் நண்பன் ரவிராஜ் அமர்ந்திருந்தான். இன்றுள்ள எம்பிக்கள் புதியவர்கள். அவர்களுக்கு அவரை தெரியாது. ஆனால் எனக்கு நன்கு தெரியும். கொழும்பில் வாழ்ந்த நாம் இருவரும் 2001ம் ஆண்டில் இருந்தே நல்ல நண்பர்கள். சிங்கள மக்களுக்கு தமிழர் பிரச்சினையை சிங்களத்தில் சொல்ல முயன்றதற்காக ரவிராஜ் கொல்லப்பட்டார்." "அன்று நானும், ரவியும் சேர்ந்து பலவந்த கடத்தல், சட்ட விரோத படுகொலைகள், வெள்ளை வேன் கலாச்சாரத் துக்கு எதிராக போராடினோம். Extra judicial killings, enforced abductions களுக்கு எதிராக போராடினோம். என்னையும்,



மனோ கணேசன் (பா.உ. இலங்கை)

ராகமை, களுத்துறை, தெமட்டகொடை ஆகிய மூன்று இடங்களில் கொல்ல முயன்றார்கள்." "இந்த வன்முறை ஆட்டம்-தான் இன்றும் தொடர்கிறது. "

"முதல் அரசியல் கொலையை,1959ல் பண்டாரநாயக்காவை கொலை செய்து, ஒரு பௌத்த ஆமதுரு ஆரம்பித்து வைத்தார்.அதன்பின் பௌத்த மதத்தை அரசியலில் கலக்க விட்டு, இந்நாட்டை அழித்து விட்டீர்கள்." "இந்த ஆமதுருக்கள் அரசியலில் வேண்டாம். கைகூப்பி கோருகிறேன். இவர்கள்தான் இத்தனைக்கும் காரணம்."

"நாம் ஆமதுருமார்களை பன்சலைக்



கும், குருக்கள்மார்களை கோவிலுக்கும், இமாம்களை பள்ளிவாயல்களுக்கும், பாதிரிகளை தேவாலயங்களுக்கும் போக சொல்வோம். இவர்கள் இங்கே வேண்டாம். அரசியலில் வேண்டாம்"

"இந்த சபையில் ஒரு ஆமதுரு மந்திரி இன்று இருக்கிறார். அவரே இங்கு வந்த கடைசி மந்திரியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன்." "இந்நாட்டின் இன்றைய சீரழிவுக்கு இவர்கள்தான் காரணம். எவருக்கும் இவர்களது அறிவுரை வேண்டுமென்றால், அவர்களது மத ஸ்தலங்களுக்கு போய் கேட்கலாம். இங்கே வேண்டாம்".

"கடந்த தேர்தலின் போது ஒரு கேலி கூத்து நடந்தது. களனி விகாரை ஆமதுரு சொன்னார். களனி கங்கை ஆறு இரண்டாக பிளந்ததாம். "டோம்" என சத்தம் வந்ததாம். பாதாளத்தில் இருந்து நாகராஜன் வந்தாராம். "நாட்டை காக்க ஒரு மன்னன் வருகிறான்" என ஒரு அசரீதி கேட்டதாம். என்ன ஒரு கேலிக்கூத்து இது! இப்படி வெட்கமில்லாமல் சொன்ன அந்த ஆமதுரு இன்று களனி பல்கலைக்கழக உபவேந்தராம். வெட்கம்..!

சும்மா இந்த வன்முறைகளை பற்றி, இந்த பக்கமும், அந்த பக்கமும் மாறி, மாறி குற்றம் சாட்டுவதில் பயனில்லை. அனைத்துக்கும் மூல காரணம் இந்த ஆமதுருகள்-தான். இவர்களை பன்சலைக்கு அனுப்புங்கள். அரசியலில் இவர்கள் வேண்டாம்." (சிங்கள மொழியில் இன்னும் சொன்னேன். ஆளும், எதிரணி உறுப்பினர்கள் கைதட்டி ஆமோதித்து கேட்டார்கள்.




# விம்பம் ஏற்பாட்டில் லண்டனில் மலையக இலக்கிய மாநாடு- 2022

**(11.06.2022) Trinity Centre East ham London E12 6SG**

விம்பம் ஏற்பாட்டில் லண்டனில் ஜுன் மாதம் 11 ஆம் திகதி மலையக இலக்கிய மாநாடு-2022 வரும் ஜுன் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை 10.00 மணி முதல் மாலை 8.30 வரை லண்டனில் மலையக இலக்கிய மாநாடு-2022 நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மலையகத் தமிழர்களின் வாழ்வு, கலாசாரம், கலைகள் சார்ந்து பல நிகழ்ச்சிகள் இதில் அரங்கேறவிருக்கின்றன.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக கோகிலம் சுப்பையா அரங்கு, இர.சிவலிங்கம் அரங்கு, சோ.சந்திரசேகரம் அரங்கு, சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு, தமிழோவியன் அரங்கு, சாரல்நாடன் அரங்கு, காத்தாயி அரங்கு என ஏழு அரங்குகளில் 24 மலையக நூல்கள் அறிமுகமாக இருக்கின்றன.

புனைவு இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் அல்-அஸுமத், மாத்தளை சோமு, ஆகியோரின் நாவல்களும் மு.சிவலிங்கம், பிரமீளா பிரதீபன், பதுளை சேனாதிராஜா, தங்கவேல் ஆகியோரின் சிறுகதைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அமரர் உபாலி லீலாரட்னா எழுதிய சிங்கள நாவலின் தமிழாக்கமான இரா.சடகோபனின் 'தேத்தண்ணி' முக்கிய மொழிபெயர்ப்பு நாவலாக ஆய்விற்குத் தேர்வு பெற்றிருக்கிறது. எஸ்தர், அரு.சிவானந்தன் ஆகியோரின் கவிதைத் தொகுப்புகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன. பி.ஆர்.பெரியசாமி, ச.கீதப்பொன்கலம், ந.சரவணன், மல்லியப்புசந்தி திலகர், வரதன் கிருஷ்ணா, எம்.வாமதேவன், கந்தப்பளை தாமரை யு.யோகா ஆகியோரின் சமூக,அரசியல் நூல்களும் இம்மாநாட்டில் முக்கிய கவனம் பெறவிருக்கின்றன. சோ.சந்திரசேகரம், மு.நித்தியானந்தன், பொன்.பிரபாகரன் ஆகியோரின் ஆய்வுநூல்கள் மீதான விமர்சனங்களும் உள்ளன. மைத்ரி ஜெகதீசனின் தேநீரும் புரிந்துணர்வும் (Tea and Solidarity) யோகேஸ்வரி விஜயபாலனின் முடிவில்லா சமத்துவமின்மை (Endless Inequality) ஆகிய இரு ஆங்கில ஆய்வு நூல்கள்




மீதான விமர்சனங்களும் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

மெய்வெளி நாடக அரங்கிற்காக சாம் பிரதீபன் தயாரித்தளிக்கும் காத்தாயி காதை என்ற நாடகம் இம்மாநாட்டில் அரங்கேறுகிறது.

முக்கிய நிகழ்வாக மு.நித்தியானந்தன், ஹெச்.ஹெச்.விக்ரமசிங்க தொகுத்து வழங்கும் சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் இம்மாநாட்டில் வெளியிடப்படவிருக்கிறது. பிரிட்டன்,ஜெரி,நோர்வே, டென்மார்க்,பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து 25 உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். விம்பம் அமைப்பின் சார்பில்,ஓவியர் கே.கிருஷ்ணராஜா மலையக இலக்கிய மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பை மேற்கொள்கிறார்.

**மேலதிக விபரங்கட்கு:**

**K K Rajah: + (44) 07736 908 421,**
**M Nithiyananthan: + (44) 07540 004 714,**
**S Santhan: + (44) 07883 573 337**



# Lucky Fly Reisebüro

## 2022 Summer

# Best Offers

**COLOMBO**




e.mail: info@L-Fly.de | www.L-fly.de

SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | طيران الخليج Gulf Air

**Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171**

**Essener Str.26 44793 Bochum-Germany**



# குவேனியின் சாபம்

## இன்றும் இலங்கை ஆட்சியாளர்களைத் துரத்துகிறது!

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும்கூட "சாபம்" என்கிறவொன்றின்மீது ஏதோவொரு அச்சம் இருந்துகொண்டேதானிருக்கும். அப்படி இலங்கையின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட ஓர் சாபம் அறிவியல் தாண்டியும் உண்மைதானோ என எண்ணும்வகையில், இன்றுவரையில் பலித்துக் கொண்டேதான் இருக்கின்றதென்றால் மிகையில்லை. ஆம், அது இலங்கையின் பூர்வகுடி பெண்ணான குவேனியின் சாபம்தான்! விஜயனின் வருகையோடு ஆரம்பிக்கும் இலங்கை வரலாற்றில் (கிமு 543 ), அவனுக்கு அடைக்கலம் கொடுக்கும் பூர்வகுடி பெண்ணான குவேனிக்கும் விஜயனுக்கு ஏற்படும் காதலில் இரு குழந்தைகளும் பிறக்கின்றனர். எனினும் தாம் உருவாக்கியிருக்கும் புதிய நகரங்களுக்கு விஜயனை மன்னராகும்படி கோரும் அவனது எழுநூறு நண்பர்களினதும் கோரிக்கைக்கிணங்க, பாண்டிய இளவரசியை மணந்துகொள்ளும் விஜயன், தன்னுடைய இரு குழந்தைகளையும் அரண்மனையில் விட்டுவிட்டு குவேனியை எங்காவது சென்றுவிடும்படி கூறுகின்றான். இதனால் மனமுடைந்த குவேனி தன் இறுகுழந்தைகளையும் அழைத்துக்கொண்டு "லங்காபுர" எனும் இடத்திற்கு செல்ல, அங்கே அவளது குலத்தவர்களே அவளை கொலை செய்ய முயல்கின்றனர் அங்கிருந்து தப்பியோடும் குவேனியின் குழந்தைகளே இன்றைய இலங்கையின் ஆதிவாசிகளின் முன்னோர்கள் என கருதப்படுகின்றது. உண்மையில் விஜயனுக்காக பெரும் விலையைக் கொடுத்தவள் குவேனி.





பிரியா இராமநாதன்
(இலங்கை)

தனது இனத்தால் தனிமைப்படுத்தியதை ஏற்றுக் கொண்டது கூட விஜயனிடம் கொண்டிருந்த நம்பிக்கையால்தான். தனது இனத்தவர்களை (இயக்கர்களை) விஜயன் அழிக்க முடிவெடுத்தபோது அந்த அழித்தொழிப்புக்கு விஜயனுடன் ஒத்துழைத்தவள். விஜயன் தலைவனாவதற்கு உதவியவள் . அப்படிப்பட்ட குவேனியால் விஜயனின் துரோகத்தை அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுக்கொள்ள இயலுமா என்ன? அவள், தான் தற்கொலை செய்துகொள்ளும்முன் ஒன்பது சாபங்களை விடுகின்றாள், அந்த சாபங்கள்தான் இன்றுவரையில் இலங்கையை பாடாய்படுத்துகின்றது எனும் நம்பிக்கை சிங்கள மரபுவழி இன்றும் உள்ளது.

"இலங்கைத் தீவு நான்கு திசைகளாலும் அழிக்கப்படட்டும்" எனும் முதல் சாபத்தின் பிரகாரம் சுனாமி போன்ற பேரழிவினை சிங்களவர்கள் குறிப்பிடுகின்றனர். "சாபுர்ன" என்றழைக்கப்படுகிற இரண்டாவது சாபத்தின்படி இலங்கைக்கு யார் எல்லாம் தலைமை தாங்குகின்றார்களோ அவர்கள் அழிந்து போகட்டும் என்பதே. மூன்றாவது சாபமான அன்னிய ஆக்கிரமிப்புகளுக்கு சிக்கட்டும்" என்பதன்படி போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஆளப்பட்டு இன்று சீனா, இந்தியா, அமேரிக்கா என யாரின் பிடிக்குள் இருக்கின்றோம் என தெரியாமலே சிக்கியிருக்கும் சொப்பனசுந்தரி நிலையே இலங்கைக்கு. நான்காவதாக ,ஹெல இனம் இரத்தத் தூய்மை இழந்து தனித்துவத்தை இழக்கட்டும் எனும் "பக்கி மவுரி" என்கிற சாபத்தின்படி இனத்தூய்மை இழந்து, ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு சாக்காட்டுங்கள் என்கிற சபிப்பு (சிங்கள வரலாற்றில் ஆட்சிக்காக எழுந்த சகோதர சண்டை காசியப்பன் முதல் ராஜபக்ஷே வரை தொடர்கின்றதோ என்னவோ), ஹெல தீவு இரண்டாகப் பிளந்து கடலுக்குப் பலியாகட்டும் எனும் 'நிமி மினிச" என்கிற ஐந்தாவது சாபமானது இலங்கை இரண்டாக

28 ஆம் பக்கம் பார்க்க...

இலங்கையின் ஆதி குடிகள் தமிழர்கள் தான் என்பதற்கான ஆதாரம்









# போதி மரம்

படங்கள்: வெற்றிமணி

## கிணத்தடி எண்டது வெறும் தண்ணி இருக்கிற இடம் மட்டுமில்லை

காலமை எழும்பி கடனை முடிக்க கிணத்தடிக்குப் போனா, அடுப்புச் சாம்பலையும் கரியையும் கலந்து தும்பால இயத்துக்களை மினுக்கின படி“ கொஞ்சம் தண்ணி அள்ளித்தாவான்“ எண்டு அம்மம்மா கேட்டா. மனிசிக்கு விடியல் கிணத்தடீல தான். அள்ளிக்குடுத்திட்டு நானும், கடனை வைக்காமல் முடிக்க வேண்டும் இல்லாட்டி துன்பம் தான் எண்ட படியாத்தான் காலைக கடன் எண்டு சொல்லிறவங்களோ? எண்டு யோச்சபடி வாளியோட நடந்தன் ,கடனை அடைக்க.

ஒவ்வொருத்தனுக்கும் கிணத்தடியும் கக்கூசும் கூட போதி மரங்கள் தான் ஏனெண்டால் இங்க தான் கன பேருக்கு தத்துவம் பிறக்கிறது. ஓட்டைக்கிணத்து வாளீல தண்ணி அள்ளி ஒழுகிற கக்கூஸ் வாளீக்குள்ள விட்டிட்டு போய் குந்தி இருந்து போட்டு, எட்டிப்பாக்க தண்ணி இல்லை எண்டேக்க தான் எனக்கு விளங்கிச்சு காதறுந்த ஊசியும் ஓட்டை கக்கூஸ் வாளியும் கடைசி வரை உதவாது எண்டு. வாளியின் ஓட்டையை அடைக்க பிலாக்காய்பால்ல இருந்து, தார் வரை முயற்சி பண்ணி கடைசீல, புது வாளி வாங்கிக் கொண்டு வர கக்குசுக்கா? எண்ட கேள்வி வந்திச்சுது. ஓட்டைக் கிணத்து வாளி இடம் மாறி கழுவிறதுக்குப் போக, புதிசு





Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

கப்பீல தொங்கிச்சுது. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே எண்ட கிணத்தடி ஞானம் அப்ப பிறந்திச்சு.

“என்ன கிணத்துக்கட்டில பிள்ளைய வளத்தின மாதிரி பறக்கிறாய்” எண்டு அம்மா நான் அந்தரப்பட்டா பேசவா. அப்ப ஒருக்கா படுத்தால் என்ன எண்டு யோசிச்சன். படுத்தும் பாத்தன் ஆனாலும் பயமாய் இருந்திச்சு. பரிணாம வளர்ச்சியில் கிணறும் விடுபடேல்லை. வட்டக்கிணறு அதன் விட்டத்தில் இருவது வீதம் இழந்து முக்கால் வட்டம் ஆனது. கல்லு மட்டும் அடுக்கின கிணத்துச்சுவர், சீமெந்து பூசிக்கல்லு வைச்சு ஒரடி அகலமான கிணத்துக்கட்டானது அதோட நிலமட்டத்திலிருந்து உயரவும் தொடங்கியது. கைவாளி மறைஞ்சு துலா, கப்பி ஆனது. சீவின பூவரசந்தடீல கட்டின வாளி கையை நோகப்பண்ண கயிறு, சங்கிலி எண்டு வந்தது.

கிணத்தடி எண்டது வெறும் தண்ணி இருக்கிற இடம் மட்டுமில்லை அதையும் தாண்டி விசேசமானது. தண்ணி இருக்கிற கிணத்துக்கு, தண்ணி அள்ள கப்பி, இல்லாட்டி துலா கட்டி, அள்ளிற பக்கம் குளிக்கிறதுக்கு தோய்க்கிற-



துக்கு சீமெந்து நிலம் வைச்சு, மழை காலம் நிலம் வழுக்காம இருக்க சிப்பியை கவிட்டு ஒட்டி வைச்சு, அதோட சேந்த உடுப்புத்தோய்க்கிற கல்லும் பக்கத்தில ஒரு தொட்டியும் கட்டி, குளிக்கிற தண்ணி ஒடிற வாய்க்காலோட வாழை வைச்சு, கிணத்துக்கு கிட்ட ஒரு இளநி மரம் நட்டு,கிணத்துக்க இலையக்கொட்டிறத்துக்கு வேலியோட ஒரு வாதநாராயணி இல்லாட்டி பூவரசு இருக்க, அதில உடுப்பு போடுற கொடி கட்டி, இருந்தாத் தான் கிணத்தடி இல்லாட்டி அது வெறும் கிணறு.

தேவைக்கு வாழையிலை வெட்டப் போறதும் கிணத்தடி தான். இருட்டுப் பயத்தில மூத்தா போறதும் கிணத்தடி தான். வீட்டை சண்டை பிடிச்சிட்டு அம்மாவை வெருட்ட இயக்கத்துக்குப் போயிடுவன் எண்டு சொல்லிற காலத்திக்கு முதல் கிணத்தடீல போய் தான் இருக்கிறது. கிணத்தடி பூதத்தை நம்பி இடம் பெயர்வுகளில பயத்தில நகை தாலி புதைச்சு வைச்சதும் கிணத்தடி தான். ஒவ்வொரு ஒழுங்கையிலும் எந்தக் கோடைக்கும் வத்தாத ஒரு வீட்டுக் கிணறு இருக்கும். அதே போல் நல்ல தண்ணிக் கிணறும் ஒண்டும் இருக்கும். இந்தக்கிணறுகளும் ஒரு பொதுச் சொத்துதான். பலர் குடிக்கவும் சிலர் குளிக்கவும் போறவை. இப்பிடி தண்ணி அள்ள ஆற்றேம் வீட்டை போகேக்க கிணத்தடீல சண்டையிருக்காது ஆனால் அரட்டை அரங்கம் இருக்கும்.



வேலைக்குப் போட்டு வந்த அப்பாட்டை இல்லாட்டி செத்த வீட்டுக்கு போய் வந்த அம்மாட்டை கிணத்தடீல இருந்து அவை தோஞ்சு கொண்டிருக்கேக்க விடுப்புக் கேக்கிறதும் நடக்கிறது. கிணத்தையும் ஒரு சாமி அறை மாதிரித்தான் சுத்தம் பத்தமா பாவிக்கிறது.

28 ஆம் பக்கம் பார்க்க...






# எந்தப் புள்ளியிலிருந்து தொடங்கும் வாழ்வு?

கனவுகளைக் குழைத்து
அதன் மீது நடந்து

குன்றேறி
பெருமலைகளைக் கடந்து

வானம் தொட்டு

விண்மீன்களை எடுத்துக்
கைவளை செய்து

கந்தர்வியைப் போல
கால்கள் உயர்த்திப் பறந்து

அதற்கும் மேலே

கைக்குட்டை போல
அண்டவெளிதனை
மடித்துச் சொருகி...

நிலவெடுத்தொரு
திலகமிட்டு

கருந்துளை
இரகசியங்களை
அறிந்து.. நிமிர்ந்து
ஒரு கடவுளைப் போல
ஒளிர்ந்தென்ன?

எங்ஙனம் பெருகும்...

காலின் கீழ்
முளைத்ததொரு
சிறு பூவின்
அசைவை உணராப்
பெருவாழ்வு!



கவிதா
லட்சுமி
(நோர்வே)



# கப்பிங் தெரபி (Cupping therapy) செய்து கொள்வதால் என்ன நன்மை?

கப்பிங் தெரபி என்பது கப்பை (கோப்பையை) (Cup) வைத்து செய்யப்படும் ஒரு மருத்துவமாகும். நோய்க்குக் காரணமான நச்சுப் பொருட்களை உடலிலிருந்து வெளியேற்றுவதே இதன் நோக்கமாகக் கருதுகிறார்கள்.

கப்பை நோயின் தேவைக்கு ஏற்ப தலை, கை, கால், முதுகு,தோள்பட்டை போன்ற ஏதாவது ஒரு பகுதியில் வைப்பார்கள். பின்னர் உபகரணங்கள் மூலம் கப்பிற்குள் இருக்கும் காற்றை வெளியேற்றுவதன் மூலம் அதற்குள் உள்ள அழுத்தத்தைக் குறைப்பார்கள். காற்று அழுத்தம் குறைவதால் கப் மூடியிருக்கும் பகுதியில் உள்ள சருமம் சற்று இழுபடும். இதனால் கப் அழுத்திய இடத்தில் அது அண்டிய அடையாளம் தென்படும்.

இப்பொழுது அடையாளம் ஏற்பட்ட பகுதியில் சிறிய ஊசிகள் அல்லது கத்திகள் மூலம் நுண்ணிய வெட்டுகளை போடுவார்கள். பின்னர் மீண்டும் அந்த இடத்தில் கப்பைப் பொருத்தி எதிர் அழுத்தம் பிரயோகித்து அதில் கசியும் இரதத்தை உறிஞ்சி எடுப்பார்கள். நோயை ஏற்படுத்தும் பதார்தங்கள் அந்த இரத்தம் ஊடாக வெளி யேற்றப் படுவதாக நம்புகிறார்கள். அவ்வாறு இரத்தத்தை வெளியேற்றாது வெறுமனே மறை அழுத்தத்தை பிரயோகித்து சிகிச்சை செய்வதும் உண்டு.

முதலில் கூறியதை வெட் (Wet) கப்பிங் என்பார்கள். இரண்டாவதாக சொன்ன இரத்தம் வராத முறையை டிரை (Dry) கப்பிங் என்பார்கள். இவற்றைத் தவிர ஓயில் கப்பிங், மக்னட் கப்பிங், ஐஸ் கப்பிங், பம்பு கப்பிங் என்று பல உப வகைகள் உண்டு. பொதுவாக 3 முதல் 5 கப்களைப் பயன்படுத்துவார்கள்.7 கப்களை பயன் படுத்துவதும்உண்டு. மாறாக ஒரு ஒரு கப்பை மட்டும் வைத்து சிகிச்சை செய்வதும் உண்டு.



## இது ஒரு புராதன மருத்துவ முறையாகும்! கி.மு 1550

கப்பானது ரப்பர், சிலிக்கோன், கிளாஸ் போன்றவற்றால் ஆனது. ஆனால் இந்த மருத்துவமுறை பயன்படுத்தப்பட் ஆரம்ப காலங்களில் களிமண்ணால் ஆன கப்புகளே பயன்படுததப்பட்டன. ஸ்பிரிட், மூலிகை அல்லது பேப்பரை அதில் போட்டு எரிப்பார்கள். நெருப்பு அணைந்ததும் சூடான அந்த கப்பை உடலின் தேவையான பகுதியில் கவிழ்த்து வைப்பார்கள். காற்று வெக்கை தணிந்து குளிரடையும் போது மறை அழுத்தம் (Negative pressure) ஏற்பட்டு



சருமம் உள்வாங்கப்படும். இது ஒரு புராதன மருத்துவ முறையாகும். எகிப்து, சீனா போன்ற நாடுகளில் முதலில் செய்யப்பட்டது. இந்த மருத்துவம் பற்றிய குறிப்பு கி.மு 1550 ஆண்டளவில் எழுதப்பட்ட Ebers Papyrus நூலில் இருப்பதாகத் தெரிகிறது. ஆரம்ப காலத்தில் மண்ணாலான கப் மற்றும் மூங்கில் தண்டுகளால் செய்யப்பட்ட கப்களும் பயன்படுதப்பட்டததாகத் தெரிகிறது.

பல்வேறு விதமான நோய்களை இந்த மருத்துவம் குணப்படுத்தும் என கப்பிங் தெரபி செய்பவர்கள் கூறுகிறார்கள். உதாரணமாக இரத்த சோகை, மூட்டு வாதங்கள், மலட்டுத்தன்மை, கபாலக் குத்து, எக்ஸிமா போன்ற சரும நோய்கள், நாளப் புடைப்பு நோய், ஆஸ்த்மா, மனப் பதற்ற நோய், மனச்சோர்வு நோய் என்றவாறு பலவற்றைக் கூறுகிறார்கள். நோய்கள் எதுவும் இல்லாவிட்டாலும் அவை ஏற்படாமல் தடுக்கவும் கப்பிங் தெரபி செய்யலாம் என் கிறார்கள். இருந்த போதும் ஆய்வு ரீதியாக அவை நிருபிக்கப்பட்வில்லை.

வலி நிவாரணம், ஹெர்பீஸ் சொஸ்டர், முகப்பருக்கள், முகத்தின் ஒரு பக்கம் மட்டும் செயலிழத்தல், முள்ளம் தண்டு நோய்கள் போன்ற பிரச்சனைகளுக்கு கப்பிங் தெரபி உதவக் கூடும் என 2012ல் செய்யப்பட்ட ஒரு ஆய்வு கூறியது. ஆயினும் ஏனைய மருந்துகள் அல்லது அக்யூபங்சர் போன்ற ஏனைய மருந்துவங்களுடன் கப்பிங் தெரபியை இணைத்து செய்யப்படும்போதே பலன் கிடைக்கலாம் எனக் கூறுகிறது. எனவே கப்பிங் தெரபியின் பயன்பாடு இதன் மூலம் தெளிவாகவில்லை.

26 ஆம் பக்கம் பார்க்க...



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்






# 'எல்லா வேலையும் கொஞ்சம் தெரிந்தவன் ஆனால் ஒன்றிலும் நிபுணன் இல்லை'




கனகசபேசன் அகிலன்
(இங்கிலாந்து)

JACK or MASTER ? கனக்க எழுதினால் வாசிப்பதற்கு யாருமில்லை, குறைத்து குறளாக்குவதற்கு நான் வள்ளுவனில்லை, சிலவற்றை எழுதாமல் இருக்கவும் முடியவில்லை, நேரமிருந்தால் வாருங்கள்... 'Jack of all trades, master of none' என்ற வாசகத்தை கேள்விப்பட்டிருப்பீர்கள், இதை என் அறிவுக்கு எட்டியவரை தமிழில் மாற்றினால் 'எல்லா வேலையும் கொஞ்சம் தெரிந்தவன் ஆனால் ஒன்றிலும் நிபுணன் இல்லை' என்று அர்த்தப்படும்.

இக்காலங்களில் இது ஒருவரை அவமதிப்பதற்காக கூறப்படுவது போல் எமக்கு தெரிந்தாலும், ஆரம்ப காலங்களில் இது ஒருவரை பாராட்டுவதற்காகவே கூறப்பட்டது. இங்கு Jack என்று வர்ணிக்கப்பட்டவர் வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare) என்று கூறுகின்றார்கள் - நாடக அரங்கங்களில், ஒரு இயக்குனராக, பிறர் மறந்து போன வசனங்களை அவர்களுக்கு ஞாபகப்படுத்த கூடியவராக, மற்றும் வேறு பல வேலைகளை (அந்த துறையில் உள்ளவர்களைவிட திறமையாக) செய்யக் கூடியவராக அவர் இருந்திருக்கிறார். இனி விடயத்திற்கு வருவோம்,

நண்பனொருவன் அன்று என்னை தொலைபேசியில் அழைத்து 'Boiler (கொதிகலன் – குளிர்நாடுகளில் தண்ணீரை சூடாக்குவது) இல்லோ பழுதாய் போச்சுது, உனக்கு பழுது பார்க்கும் யாரையாவது தெரியுமே?' என்று கேட்டான், நான் இல்லையென்று கூற, அவன் 'சரி, எனக்கு தொட்டாட்டு வேலை செய்யிற பெடியன் ஒருவன் இருக்கிறான், அவனுக்கு எல்லா வேலையும் ஓரளவுக்கு தெரியும், அவனை கேட்டு பார்ப்போம்...' என்று கூறி தொலைபேசியை வைத்து விட்டான்.

இரண்டு நாள் கழித்து திரும்பவும் என்னை அழைத்து 'Boiler க்கு என்ன நடந்ததென்று தெரியுமே? நான் சொன்ன பெடியன் வந்து, ஐந்து மணித்தியாலம் செலவழிச்சு, எல்லாத்தையும் கழட்டி பார்த்தும், ஒன்றுமே சரிவரவில்லை, பெடியன் பாவமென்று எண்பது பவுணை (+80) கொடுத்து அனுப்பி விட்டனான், பிறகு Heating Engineer(வெப்ப பொறியியலாளன்) ஒருவன் வந்து அதை அரை மணித்தியாலத்திலை செய்து போட்டான் ஆனால்'......'என்ன ஆனால்?

Boiler வேலை செய்யுது தானே?' என்று நான் கேட்க. அதற்கு அவன் 'ஓமடா...ஆனால் தொண்ணூறு பவுண் (+90) எடுத்திட்டான், அதுவும் அரை மணித்தியாலத்திற்கு!' இதுதான் பல இடங்களில் நடக்கும் பிரச்சனை, 'நான் தான் சகலகலா வல்லவன்' என்று திரிபவர்களிற்கு, அவர்கள் ஒழுங்காக செய்யாத வேலைக்கு, மணித்தியால கணக்கு பார்த்து சந்தோசமாக காசு கொடுக்க நாங்கள் தயார், ஆனால் எமது நேரத்தையும், தமது நேரத்தையும் விரயம் செய்யாது, எமது பிரச்சனையை இலகுவாக தீர்க்கும் நிபுணர்களுக்கு உரிய பணம் கொடுக்க தயங்குகின்றோம்! இதயத்தில் ஏதாவது கோளாறு வந்து அறுவை சிகிச்சை செய்ய நேர்ந்தால், பணம் குறைவாக எடுப்பார் என்று பக்கத்து றோட்டிலுள்ள பரியாரியிடம் துணிந்து நெஞ்சை காட்ட எத்தனை பேர் தயார்?

'எல்லா வேலையும் தெரிந்திருந்தால் வாழ்க்கையில் கஷ்டப்பட தேவையில்லை' என்று சிறு வயதில் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன், உண்மையும் கூட, எல்லா வேலைகளும் ஓரளவு தெரிந்திருப்பதால் பல நன்மைகள் உண்டு, இப்படியானவர்களுக்கு எப்போதும் ஏதாவது வேலையும் பண வருவாயும் இருந்து கொண்டேயிருக்கும், ஆனால் அவர்கள் செலவழிக்கும் நேரத்திற்கு ஏற்ப ஊதியம் கிடைக்கின்றதா என்பது கேள்விக்குறி!

இப்படியானவர்கள் ஒருவராவது எல்லா வேலைத்தலங்களிலும் இருப்பார்கள், இவர்களை வேலையில் இருந்து நிறுத்துவது கஷ்டம், நிறுத்தினால் முதலாளிக்கு நஷ்டம்! ஆனால் இவர்களில் பலருக்கு பதவி உயர்வும் கிடைப்பதில்லை. ஓரிரு வேலைகளில் நிபுணர்களாக இருப்பவர்கள் குறைந்த நேரத்தில் மிகுந்த பணத்தை சம்பாதிக்கின்றார்கள், தமக்கான நேரத்தையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். பண வருவாய் போதாதென்று ஒவ்வொரு வேலையாக மாறி மாறி நேரத்தையும், சக்தியையும் வீணடிக்காது, எந்த துறையாக இருந்தாலும் பிடித்தமான ஒரு துறையை தேர்வு செய்து, முழு முயற்சியுடன், அந்த துறையிலுள்ள நுணுக்கங்களை அறிந்து, எல்லோரும் உங்களை தேடி வரும் வகையில் ஒரு நிபுணராக வருவீர்களாயின், பல துறைகளை ஓரளவு தெரிந்தவர்களை விட நீங்கள் மிகவும் உயரத்துக்கு செல்லலாம் என்பது எனது அபிப்பிராயம்.

Jack of all trades, master of (N)ONE..

# விமான ஓடுபாதையும் கம்பனும்!



இரா.சம்பந்தன் (கனடா)

இராமரும் தம்பியும் சீதையைத் தேடிப் போகிறார்கள். இராவணனின் விமானச் சக்கரங்கள் மண்ணிலே உருண்டு சென்ற அடையாளங்கள் தெளிவாகத் தெரிகிறன. அதைப் பின்பற்றிச் செல்கிறார்கள். ஆனால் போகப் போக தெளிவாகத் தெரிந்த சக்கரச் சுவடுகள் தெளிவில்லாமல் ஆகி விடுகின்றன. மண்ணிலே பட்டும் படாமலும் தெரிகின்றன. ஒருகட்டத்துக்கு மேல் விமானத்தின் சுவடுகளே இல்லை. ஆம்! விமானம் ஓடுபாதையில் ஓடி வானத்தில் எழுந்து போய்விட்டது. விமானம் நிலத்திலே ஓடிய பின்புதான் வானத்தில் எழுந்தது என்ற உண்மையை உணர்ந்ததும் வெந்த புண்ணிலே வேல் ஏறியது போல வருந்தி தம்பி இனி என்ன செய்யலாம் என்று கேட்டான் இராமன்.

**மண்ணின் மேல்அவன் தேர்சென்ற**
**சுவடு எல்லாம் ஆய்ந்து**
**விண்ணில் ஓங்கிய ஒருநிலை**
**மெய்யுற வெந்த புண்ணில் ஊடுஒரு**
**வெல்என மனம்மிகப் புழுங்கி எண்ணி**
**நாம்இனிச் செய்வது என்ன**
**இளவலே என்றான். விமானங்கள்**
**ஓடுபாதையில் ஓடி வேகம் எடுத்து**

புவியீர்ப்பை வென்ற பின்தான் மேலே எழ முடியும் என்ற விஞ்ஞான விளக்கம் விமானத் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்த றைட் சகோதரர்கள் பிறப்பதற்கு முன்னரே கம்பனால் சொல்லப்பட்டு விட்டது.




# எனது நாடக அனுபவங்கள் 18



ஆனந்தராணி பாலேந்திரா (UK)





# ஒரு பாலை வீடு நாடகம்-1980

ஏப்ரல் இதழில் முற்று முழுதாக பெண்கள் நடித்த 'ஒரு பாலை வீடு' நாடகத்தை வேறு இடங்களில் பாலேந்திரா மேடையேற்ற விரும்பியது பற்றியும் முதல் மேடையேற்றத்தில் நடித்த சுண்டுக்குளி பழைய மாணவிகள் சிலர் நடிக்க வர மறுத்து பின்னர் நானும் வேறு சில பெண்களும் அவர்களின் பாத்திரங்களை ஏற்று நடித்தது பற்றியும் எழுதியிருந்தேன்.

இந்த நாடகத்தின் ஆடை அலங்காரம் ஒப்பனை மேடையமைப்பு பற்றியும் கட்டாயம் கூறவேண்டும். ஸ்பானிய நாடகமான 'ஒரு பாலை வீடு' தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டே மேடையேற்றப்பட்டது. தழுவல் அல்ல. எப்படி ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் தமிழில் அப்படியே மேடையேற்றப்பட்டதோ அதே போல கதாபாத்திரங்களின் பெயர்கள் ஸ்பானியப் பெயர்களாக இருந்தன. எனவே ஆடை அணிகலன்களையும் கதைக்குப் பொருத்தமாகவே பாலேந்திரா தேர்ந்தெடுத்திருந்தார்.

தந்தையாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டுவிட்டு எல்லோரும் வீடு திரும்பும் காட்சியுடன் இந்த நாடகம் ஆரம்பமாகும். இந்த நாடகத்தில் எல்லா நடிகைகளுமே கறுப்பு நிற நீண்ட ஆடை அல்லது வெள்ளை - சாம்பல் நிற ஆடைகளை அணிந்து நடித்தோம். தலைமுடியையும் மறைத்து கறுப்பு நிறத்தில் முக்காடு அணிந்திருந்தோம். பொதுவாக வர்ண வர்ண ஆடைகளை சேலைகளை விரும்பி அணியும் பெண்களுக்கு இந்தக் கறுப்பு - வெள்ளை ஆடைகள் கொஞ்சம் அதிருப்தியாகத்தான் இருந்தது. அதுவும் நாடகம் முழுவதும் இதே கறுப்பு-வெள்ளை-சாம்பல்தான்.

பாலேந்திரா ஒப்பனையிலும் அதிக கவனம் செலுத்தும் ஒருவர். இந்த நாடகத்தின் தன்மைக்கேற்ப ஒரு வறண்டொ இருண்ட தோற்றத்தைக் கொடுக்கும் வண்ணம் எங்களுடைய முகப் பூச்சுகள் அமைந்திருந்தன. முதலாவது மேடையேற்றத்தின்போது ஒத்திகைகளுடன் ஒப்பனையிலும் நான் உதவி புரிந்தேன். ஒரு நடிகை தன்னைக் கண்ணாடியில் பார்த்துவிட்டு தான் அழகில்லாமல் இருப்பதாகக் கருதி முகப்பூச்சை நிறைய அழித்துவிட்டார். தான் கொண்டுவந்த உதட்டுச் சாயத்தையும் பூசிவிட்டார். நாடகம் ஆரம்பமாகுமுன் பாலேந்திரா கவனித்துவிட்டார். மீண்டும் அவருக்கு ஒப்பனை செய்யப்பட்டது. ஏனைய மேடையேற்றங்களின்போது பின்னர் நடிக்க வர மறுத்த நடிகைகளில் இவரும் ஒருவர். இவர் நடித்த பாத்திரத்தில்தான் நான் மீள் தயாரிப்பில் நடித்தேன்.

'ஒரு பாலை வீடு' நாடகத்திற்காக மிகப் பிரமாண்டமான மேடையமைப்பு (செற்) செய்யப்பட்டிருந்தது. இதனை வடிவமைப்புச் செய்த குணசிங்கம் அப்போது மொரட்டுவ - கட்டுபெத்தை பல்கலைக்கழகத்தில் கட்டடவடிமைப்புத் துறையில் படித்துக்கொண்டிருந்தார். அவர் பாலேந்திரா தயாரித்து நெறிப்படுத்திய பல நாடகங்களுக்கு மேடை வடிவமைப்பை செய்ததுடன் சில நாடகங்களில் நடித்துமுள்ளார்.

'ஒரு பாலை வீடு' நாடகத்திற்கு அவர் செய்திருந்த மாதிரி வடிவமைப்பை வைத்து பிரமாண்டமான மேடையமைப்பை அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்று விளங்கிய மேடை நிர்மாணொ ஒப்பனைக் கலைஞரும் நடிகருமான பெஞ்சமின் அவர்கள் செய்திருந்தார். திரை விலகியவுடன் பார்வையாளர்களைப் பிரமிக்க வைத்த இந்த மேடையமைப்பு பற்றி கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் எழுதிய பத்திரிகை விமர்சனத்தில்.

திரை விலகியதும் எம்மைக் கவருவது மேடை முழுவதையும் அடக்கி உயர்ந்து அகன்று பழைய முறையில் அமைந்த பணக்கார வீட்டுத் தோற்றம். குறைகூற முடியாத அளவிற்கு அக்கறை எடுத்து ஏராளம் செலவிட்டு நிர்மாணித்திருக்கிறார்கள். நாடகம் நிகழும் அக்களத்தை நாடகத்தைத் தூக்கிக் காட்டுமளவுக்கு அமைந்த இந்த அரங்க அமைப்பு சுவைஞர்களையும் புதிய சூழலுக்கு இட்டுச் செல்கிறது. என எழுதியிருந்தார்.

கொழும்பில் இந்த நாடகத்தை பாலேந்திரா மேடையேற்றியபோது யாழ்ப்பாணத்தில் செய்திருந்த செற்றைக் கொண்டுபோக முடியாத நிலை ஏற்பட்டது. எனவே கொழும்பில் மேடையமைப்பில் புகழ்பெற்று விளங்கிய கதிர்காமத்தம்பி அவர்களைக் கொண்டு மீண்டும் செற் உருவாக்கப்பட்டது. கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் 03-03-1980 அன்று பகல் காட்சி மாலைக் காட்சி என இரு தடவைகள் மேடையேறியது. அடுத்த நாள் 04-03-80 அன்று 'ஒரு பாலை வீடு' நாடகம் பேராதனை பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்டபோது இதே செற் லொறியில் கொண்டு செல்லப்பட்டது. எல்லா மேடையேற்றங்களின் போதும் பிரம்மாண்டமான செற்றில் இருந்து நெறியாள்கை ஒலி. ஒளியமைப்பு உடையலங்காரம் ஒப்பனை என அத்தனை அம்சங்களிலும் பாலேந்திராவின் தயாரிப்பு நேர்த்தியைப் பாராட்டி பேராசிரியர் இந்திரபாலா அ.யேசுராசா கே.எஸ்.சிவகுமாரன் செ.யோகநாதன் ஏ.ரி. பொன்னுத்துரை ஜே.எஸ்.மரியநாயகம் ஐ.சண்முகலிங்கன் போன்ற பல பிரபல விமர்சகர்கள் பத்திரிகைகளில் எழுதியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நாமெல்லோரும் பெரிய கூட்டமாக ரயிலில் கொழும்பு



26 ஆம் பக்கம் பார்க்க...


Gopara Gnanam
ESTD 1992
SUPER DUPER CLEARANCE
TEXTILE SALE
கம் காமாட்சி அம்மன் ஆலயத் திடலில்
25.06.2022 மாலை முதல்
26. 06.2022 மாலை வரை
மாபெரும் மலிவு
விற்பனை
Rheinische str.62- 44137 Dortmund | Tel:0231 5348 2206 / 0176 616 92 900

வெற்றிமணி திருமண சேவை



இந்து மதத்தைச் சேர்ந்த
யேர்மனியில் பிறந்து கல்விகற்று
(Machinenbau) என்ஜினியராக
கடைமையாற்றும் 30 வயது
உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில்
Nordrhein-Westfalen
இல் மணமகள் தேவை.
பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489
அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது


தமிழர் அரங்கம்
INNENSTADT WEST
Kulturbüro
Stadt Dortmund
Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2022
Dortmunder U
Park der Partnerstätte
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Straßenfest der Tamilen
02.09.2022
Fr. 16:00 - 00:00
03.09.2022
Sa. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa
Integrationsagentur der
Stadtteil-Schule
Dortmund e.V.
தமிழர் கலையகம்
TKD
SIVANDIGITAL
SOUND&MORE
ortel
MOBILE
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
STS
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 16

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

தாவி தாவி பாயும் மனதை சாட்சியாய் கண்டு நகைக்கும் நிலை வந்தால் ? தான் தான் என்று ஆணவப்படும் எண்ணத்தை துண்டு துண்டாக்கினால் ?உள்ளமதில் விளையும் ஊனினைப் பேணாது உருகுலைத்துவிட்டால் ? வெள்ளமென உள்ள கள்ளத்தை காணாமல் செய்து விட்டால் ?

ஆஹா, இது எல்லாம் சாத்தியமா? எப்படி எங்கே எப்போது வயப்படும்? நம் ஆயிரம் ஆயிரம் அறியாமைக் கேள்விகளுக்கு ஒரே ஒரு சொல்லில் பதில் தருகிறார் என்றால் .....ம்ம்ம் எப்படித் தான் அவனை சரணடையாது இருக்க முடியும் ?



" காதல் "" காதலினால் மானிடருக்கு கவலை தீரும். காதல் என்ற ஒன்றே நம் கவலையை, அறியாமையை, கள்ளத்தினை, ஊனத்தினை, ஆணவத்தினை, பேராசையை, பொறாமையை ஒட்டு மொத்த அறியாமையை நீக்கிவிடும் ஒரே மந்திரம். "ஆதலினால் காதல் செய்வீர் உலைத்தீரே " பாரதியின் காதல் ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவை மட்டும் பாடியதல்ல என்று நாம் அறிவோம். அவனொரு பிரபஞ்ச காதலன். அவனது காதல் விரிவு வியப்பானது. அதில் ஒன்று, எண்ணற்ற ஒளிக்கதிர்களைப் பரவி விசாலமாக காட்சி தரும் ஞாயிறின் மீது கொண்ட காதல். படரும் வானொளி யின்பத்தைக் கண்டு ஞாயிறு வணக்கம் செய்து நிற்கிறார்.

என்ற னுள்ளங் கடலினைப் போலே
எந்த நேரமும் நின்னடிக் கீழே
நின்று தன்னகத்
தொவ்வோர் அனுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச்
செய்குவை யையா,
ஞாயிற் றின்கண் ஒளிதருந் தேவா!
மன்று வானிடைக்
கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா!

காதல் கொண்டனை போலும்மண்மீதே,
கண்பிறழ் வின்றி நோக்குகின்றாயே!
மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்
மண்டினாள் இதில்
ஐயமொன் றில்லை
சோதி கண்டு முகத்தில் இவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே
ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன்.

இது போல சூரியனை வாழ்த்தி வர்ணித்து எழுதி இருக்கும் வசனகவியில் பாரதியின் கற்பனை, சூரியக் கதிர்கள் போலவே பல கோணங்களுக்கு பரவி நிற்கிறது.

ஒளி தருவது யாது? தீராத இளமையுடையது யாது? வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது? மழை எவன் தருகின்றான்? கண் எவனுடையது? உணி எவன் தருகின்றான்? புகழ் எவன் தருகின்றான்? புகழ் எவனுக்குரியது? அறிவு எதுபோல் சுடரும்? அறிவுத் தெய்வத்தின் கோயில் எது? எனப் பல வியப்பு வினாக்களோடு ஆரம்பமாகிறது வசனகவி.

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய், வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய் ஆஹா, நெஞ்சகலா சொல்லாடல் தரும்

## ஞாயிறு அது நன்று வாழ்க

## பிரபஞ்ச காதலன்



வித்தையை நன்கு அறிந்த பாரதியே வசனகவி நடையின் முன்னோடி என்றும் நாம் அறிவோம். ஞாயிறே,இருளை என்ன செய்துவிட்டாய்? ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கிவிட்டாயா? கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்துவிட்டாயா? இருள் நினக்குப் பகையா? இருள் நின் உணவுப் பொருளா? அது நின் காதலியா? இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால் இருண்டிருந்ததா? நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானுங் கொண்டு நின்னைக் கலந்துவிட்டதா? நீங்கள் இருவரும் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகளா? முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி உங்கள் தாய் ஏவி யிருக்கிறாளா? உங்களுக்கு மரண மில்லையா? நீங்கள் அமுதமா? உங்களைப் புகழ்கின்றேன்,



என இருளையும் ஒளியையும் ஒன்றாகப் பார்க்கிறார். இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் பரம்பொருளின் வடிவமாகக் கண்டு அத்வைதம் காட்டி நிற்பவை பாரதி வரிகள்.

ஒளியே,நீ யார்? ஞாயிற்றின் மகளா? அன்று, நீ ஞாயிற்றின் உயிர். அதன் தெய்வம். என ஞாயிறில் உள்ள ஒளியை வாழ்த்துகிறார். அதன் பின் அந்த ஒளியில் உள்ள தீயை வாழ்த்துகிறார்.


அறத் தீ, அறிவுத் தீ, உயிர்த் தீ, விரதத் தீ,வேள்வித் தீ,சினத் தீ,பகைமைத் தீ, கொடுமைத் தீ-இவை யனைத்தையும் தொழுகின்றோம். இவற்றைக் காக்கின்றோம் இவற்றை ஆளுகின்றோம். தீயே நீ எமது உயிரின் தோழன்.உன்னை வாழ்த்துகின்றோம். வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்கின்றன. அவை மோனத்தில் கலந்து நித்தம் இன்புறுவன. ஞாயிறே,நீதான் ஒளித்தெய்வம்.நின்னையே வெளிப் பெண் நன்கு காதல் செய்கிறாள். உங்கள் கூட்டம் மிக இனிது.நீவிர் வாழ்க. ஒளிக்கும் வெளிக்குமான காதலை உணர்ந்து மொழிந்ததைக் காணும் போது, என் உள்ளத்தில் தீ வளர்கிறது. ஆஹா இத்தனை அருமையான விடயங்களை நம் நாட்டியத்தில் பொழிந்திட வேண்டுமே என்று எண்ண அலை துடிக்கின்றது.

ஞாயிறே ஆதாரமாகிறான், முதன்மையாகிறான் ஆதலினால் நாட்டிய உருப்படியில் முதல் நிகழ்வாக அமையும் புஷ்பாஞ்சலி என்னும் உருப்படியை ஞாயிறு வணக்கமாக வசனக்கவி புஷ்பாஞ்சலியாக

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


KALAIMAMANI
PASAIYOOR A. JESUTHASAN
நாட்டு கூத்து / இயக்குனர் / இசையமைப்பாளர் / பாடகர் / எழுத்தாளர் / கவிஞர்
RØDE
KALAIMAMANI
PASAIYOOR A. JESUTHASAN

# தமிழ் இனப்படுகொலையை கனடா ஏற்று அங்கீகரித்தமை

# தமிழ் சமூக வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வு



இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலை என கனடா பாராளுமன்றம் ஏற்று, அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றிய நாள் தமிழ் சமூகத்தின் வரலாற்றில் மிக முக்கிய நாட்களில் ஒன்று என கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலை தீர்மானத்தை கனடா பாராளுமன்றம் நேற்று ஏகமனதாக ஏற்று அங்கீகரித்தது. அத்துடன், ஒவ்வொரு ஆண்டும் மே-18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக கனடா பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.


இந்நிலையில் பிரேரணை நிறைவேற்றப்பட்ட சிறிது நேரத்திலேயே செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய ஹரி ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனடாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள தமிழ் சமூகத்தின் வரலாற்றில் இது மிகவும் முக்கிய நாள் என்று அவர் கூறினார்.

கனடா பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தமிழ் மக்களின் இனப்படுகொலையை அங்கீகரிப்பதுடன், மே-18 ஐ தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாகவும் அங்கீகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

உலகில் பாராளுமன்றம் ஒன்று இலங்கையில் இடம்பெற்றது தமிழ் இனப்படுகொலை என ஏற்று அங்கீகரிப்பது இதுவே முதல் சந்தர்ப்பம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இத்துடன், நாங்கள் நின்றுவிடக் கூடாது. உண்மையில், பொறுப்புக்கூறலை நோக்கிய பயணம் மிக நீண்டது. இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுமத்தப்பட வேண்டியதை உறுதி செய்ய நாங்கள் இன்று இரட்டிப்பு



ஹரி ஆனந்தசங்கரி

வேகத்தில் உழைக்க வேண்டும் என்றும் ஹரி ஆனந்தசங்கரி கூறினார்.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் நிறைவடைவடைந்துள்ள இவ்வேளையில், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட26 வருட கால ஆயுதப் போரில் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதாக கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், போரில் காணாமல் போனவர்கள், காயமடைந்தவர்கள், போரால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இந்த சோகத்தின் வலி, அதிர்ச்சி மற்றும் இழப்புடன் தொடர்ந்து வாழும் குடும்பங்களுடன் எங்கள் எண்ணங்கள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் இலங்கையில் மக்கள் தொடர்ந்து துன்பப்படுவது குறித்து எங்களது கவலையை வெளிப்படுத்துகிறோம். அமைதியான முறையில் போராட்டங்கள் மூலம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான மக்களின் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும் வன்முறையில் இருந்து விலகியிருக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம் எனவும் பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் உட்பட அனைத்து இலங்கை மக்களும் பாதுகாப்பான, அமைதியான மற்றும் நிலைபேறான நாட்டில் வாழ தகுதியானவர்கள்.

தமிழ் சமூகம் மற்றும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட ஏனையோரின் அனுபவங்களை பாடமாகக் கொண்டு நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடைய வேண்டியதன் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் நீதி வழங்கும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயல்முறையை தொடங்குவதற்கான அர்ப்பணிப்பை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு கனடா தொடர்ந்து அழைப்பு விடுக்கிறது.

அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான பாதையில் நகருவதற்கும் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அனைவருக்கும் கனடா தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகிறது எனவும் கனேடியப் பிரதமர் குறிப்பிட்டார்.

அத்துடன், போரில் பாதிக்கப்பட்ட தங்கள் அருகிலுள்ள தமிழர்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்துமாறு அனைத்துக் கனேடியர்களையும் நான் ஊக்குவிக்கிறேன்.

கடந்த கால அவலங்களைப் பற்றி அறிந்துகொள்வதன் மூலமும், அவற்றைப் பற்றி சிந்திப்பதன் மூலமும், அவை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்யவும், அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட முடியும் எனவும் முள்ளிவாய்க்கால் 13 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கனேடியப் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




சேவியர்
(தமிழ்நாடு)

# ஒரு கவனிப்பு கிடைக்கும் என்பதால் முரணை முன்வைக்கும் சில ஊடகங்கள்!

சில திரைப்படங்களை இயக்குபவர்கள் கிளைமேக்ஸ் காட்சியை இரண்டு விதமாகப் படமாக்குவார்கள். ஒருவேளை ஒரு முடிவு மக்களை வசீகரிக்கவில்லையேல் அதை மாற்றி விடலாம் என்பது ஒரு எண்ணம். ஒருவேளை விநியோகஸ்தர்களுக்கு ஒரு முடிவு பிடிக்கவில்லையேல் இன்னொரு முடிவை வைத்து படத்தை விற்பனை செய்யலாம் என்பது இன்னொரு எண்ணம். (உதாரணம் நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ, நடித்து பெரு வெற்றிபெற் படம் வசந்தமாளிகை. இப்படத்தில் முடிவு 2 ஆக இருக்கும், தமிழ் நாட்டில் நாயகன் சிவாஜி இறக்காத வசந்தமாளிகையும், தெலுங்கில் சிவாஜி இறந்தமாதிரியாகவும் படம் முடியும்) அதே போல பத்திரிகைத் துறையிலும் சில விஷயங்களில் இப்படி இரட்டைச் செய்திகளை தயாராக்கி வைப்பதுண்டு. கடைசி நேரத்தில் எதை வெளியிடுவது என்பதை முடிவு செய்வார்கள். குறிப்பாக ஏதாவது ஒரு முக்கியமான நபர் கவலைக்கிடமாய் மருத்துவமனையில் படுத்திருந்தால் கடைசி வினாடி வரை காத்திருப்பார்கள். அச்சுக்குப் போகும் கடைசி கணத்தில் தான் எதை வெளியிடுவது என்பதை முடிவு செய்வார்கள். காரணம், முதலில் செய்தியைக் கொடுக்க வேண்டும் எனும் ஆர்வம்! நமக்கு தெரிஞ்சப்புறம் தான் ஊருக்கே தெரியும் என காட்டிக் கொள்ளும் அவசரம் ! அவர்களுடைய பத்திரிகைக்கு அதிகம் பிரபலம் கிடைக்க வேண்டும், அதிக விற்பனை நடக்க வேண்டும், அதிக ரேட்டிங் கிடைக்க வேண்டும் போன்ற தொடர் எண்ணங்கள் !!



ஒரு விஷயத்தை முதலில் சொல்லி விடுவதாலேயே ஒரு பத்திரிகை சிறந்த பத்திரிகை ஆகி விடுவதில்லை. ஒரு முதல் பரபரப்பு கிடைக்கும் அவ்வளவு தான். அதன் பின் மக்கள் அதன் உண்மைத் தன்மையையும், அதன் பின்னணியையும், அதன் தேவையையும், அடுத்தடுத்த ஆழமான விளக்கங்களையும் நோக்கி பயணித்து விடுவார்கள்.

இன்றைக்கு அச்சு ஊடகங்களை விட அதிகமாக சமூக வலைத்தளங்களும், டிஜிடல் ஊடகங்களும் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளன. இவர்கள் எப்போதும் போனும் கையுமாகவோ, கேமராவும் கையுமாகவோ அலைகிறார்கள். கிடைக்கின்ற பதிவுகளோடு தங்களுடைய கற்பனைகளையும் கலந்து ஒரு பரபரப்பான காட்சியாக பதிவு செய்து விடுகிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை ஒரு வீடியோ வைரல் ஆகிறதா என்பதே கேள்வி. ஒரு தகவல் அவர்களுடைய சானலை அதிகம் கவனிக்க வைக்கிறதா ? அதிகம் பயனர்களை இணைக்கிறதா ? அதிகம் பார்வையாளர்களை கொண்டு வருகிறதா என்பதே அவர்களுடைய ஒரே நோக்கம்.

கண்ணால் கண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய் எனும் கோட்பாடு சமூக வலைத்தள செய்தியாளர்களிடையே இருக்க வேண்டியது அவசியம். முதலில் சொல்வது முக்கியமல்ல, முதன்மையான விஷயங்களைச் சொல்வதே முக்கியம் எனும் புரிதல் அவசியம்.

சிலர் சில விஷயங்கள் பொய் என்பதைத் தெரிந்து கொண்டே சொல்வதுண்டு. கேட்டால், அப்படிப் போட்டால் தான் ஒரு கவனிப்பை ஈர்க்க முடியும், அடுத்தமுறை அதன் விளக்கத்தைக் கொடுத்து விடலாம் என்பார்கள்.

சிலர், வேண்டுமென்றே முரணான பார்வையை முன்வைத்துக் கொண்டே இருப்பார்கள். எது சரி என்பது தெளிவாய்த் தெரிந்தால் கூட முரணை முன்வைக்கும் போது ஒரு கவனிப்பு கிடைக்கும் என்பதால் அதைச் செய்து கொண்டே இருப்பார்கள்.

ஊரே ஒரு படம் சிறப்பாக இருக்கிறது என்று சொன்னால், அதில் பல குறியீடுகள் மறைந்துள்ளன! அது ஒரு சாராரை இழிவு படுத்துகிறது, அல்லது ஒரு சித்தாந்தத்தை முன்னிறுத்துகிறது என்று ஏதேனும் கொளுத்திப் போடுவார்கள். அது மெல்ல மெல்ல ஒரு விவாதமாய் மாறி கொழுந்து விட்டு எரிய வைப்பார்கள். அது ஒரு பேசு பொருளாகும்போது, "அதை நாம தான் முதல்ல கண்டுபிடிச்சு சொன்னோம்" என பெருமை பேசுவார்கள். ஒரு செய்தியைப் பதிவிடுகையில் அதைப் பற்றி அறிந்து, ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மையை




அறிந்த பின்பே போடவேண்டும். வீசிய சொற்களை திரும்பப் பெற முடியாது. ஒரு தவறான செய்தியைப் படிப்பவர்கள் எல்லோருமே அதன் விளக்க உரையையும் படிப்பார்கள் என சொல்லி விட முடியாது !

ஒரு வாசகனுடைய மனநிலையில் ஒரு செய்தியைக் கொடுக்க வேண்டும். அந்த செய்தி வாசகனுக்கு ஒரு தகவலை அதன் யதார்த்ததுடன் புரிய வைப்பதாக இருக்க வேண்டும்.

ஒரு செய்தி சமூகத்தின் கட்டமைப்பையோ,

17 ஆம் பக்கம் பார்க்க...



# ஒரு கவனிப்பு கிடைக்கும் என்பதால் முரணை முன்வைக்கும் சில ஊடகங்கள்!



அமைதியையோ சீர்குலைக்காத வகையில் இருக்க வேண்டும். எல்லா செய்திகளையும் வெளியிட வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் வெளியிடும் செய்திகள் சமூகத்தின் ஒற்றுமையை சிதைக்காமல் இருக்க வேண்டும் என்பதே அவசியம்.

சாதி, மத, இன வெறுப்புகளை தூண்டுகின்ற செய்திகள் பரபரப்புகளை உருவாக்கலாம் ஆனால் சமூக நல்லிணக்கத்துக்கு அவை வேட்டு வைப்பவை. எனவே அத்தகைய செய்திகளைத் தவிர்க்க வேண்டும்.

நான் எழுதத் துவங்கிய காலத்தில் அப்பா ஒரே ஒரு அறிவுரையைச் சொன்னார். 'எதிர்மறை சிந்தனைகள் எதுவும் உன்னுடைய எழுத்தில் எழாமல் பார்த்துக் கொள்" என்பதே அது. அவர் மனித நேயத்தை மிக உயர்வாய் வைத்திருந்தவர். அதனால் அவர் சொல்ல வந்த செய்தி எனக்குத் தெளிவாகப் புரிந்தது. அன்றிலிருந்து இன்று வரை அதை முடிந்தவரை கடைபிடித்தே வருகிறேன். காரணம் ஒரு செய்தி சொல்லப்படுவதை விட முக்கியம், அந்த செய்தி சொல்லப்பட வேண்டுமா என்பதைப் புரிந்து கொள்வது.

சில செய்திகளை சொல்வதை விட, கொல்வது முக்கியம். !

சில செய்திகள் யாராலும் சீண்டப்படாமலேயே கிடக்கும். காரணம் அது எந்த விதமான ஒரு பரபரப்பையும் கிளப்பாது. அத்தகைய செய்திகளை சீர்செய்து சமூகத்திற்கு அளிக்க வேண்டும். துரித உணவுகளை விட ஆரோக்கியமான உணவுகளே நமக்கு முக்கியம். நல்ல மரம் வளர காலம் தேவைப்படும். இவற்றைப் புரிந்து செயல்பட வேண்டும்.

ஒரு செய்தியாளருக்கோ, ஒரு கட்டுரையாளருக்கோ, ஒரு இலக்கியவாதிக்கோ சமூகப் பொறுப்பு இரு மடங்கு அதிகம் இருக்க வேண்டும். நாம் விதைக்கின்ற விதைகள் நச்சு விதைகளாக இல்லாமல், பிறர் மெச்சும் விதைகளாக இருக்க வேண்டும். நாம் விதைக்கும் விதைகள் கனிகொடுக்க வேண்டுமே தவிர, நிலம் கெடுப்பவையாக இருக்கக் கூடாது என பதில் கவனம் தேவை.

அச்சங்களுக்கு ஆட்பட்டு செதுக்கப்படும் செய்தியானது, சிதைக்கப்பட்ட சிலை போல சின்னாபின்னமாகி விடும். செய்திகளுக்குள் வசீகரம் இருப்பதை விட, வாய்மை இருக்க வேண்டும். அழகு இருப்பதை விட அறிவு இருக்க வேண்டும் பல வேளைகளில் செய்திகள் புனை கதைகளாகவும், புனை கதைகள் செய்திகளாகவும் மாறிப் போய் பல்லிளிக்கும். செய்திகள் தற்குறிப்பேற்ற அணிகளை ஏற்றி விஸ்வரூபமெடுப்பது அவசியமற்றது. உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டும் என்பார்கள். ஆனால் உள்ளதை உள்ளபடி சொல்வது சமூகத்துக்கு தீங்கு விளைவிக்குமெனில் பொய்மையும் வாய்மையிடத்து என்பதையே பின்பற்ற வேண்டும்.

சொல்கின்ற விஷயத்தில் நடுநிலை வகிப்பது மிக மிக அவசியமான ஒன்று. அதே நேரம், அது தான் மிகவும் கடினமான ஒன்று. நமது மதம், மொழி, இனம், சாதி போன்ற அடையாளங்கள் நம்மை அறியாமலேயே தலைகாட்ட முயலும். நம்மை அறியாமலேயே நாம் ஒரு சார்பு நிலை எடுக்க அந்த அடையாளங்கள் நம்மை இழுக்கும். அத்தகைய புரிதலோடு ஒரு செய்தியைக் கொடுக்க வேண்டும்.

இதை நான்தான் முதலில் சொன்னேன் என்பதை விட, இதை நான் தான் சரியாய் சொன்னேன் என்பதே முக்கியம்! இது என் வளர்ச்சிக்கு பயன்படும் பயன்படும் என்பதை விட, இது சமூக மலர்ச்சிக்கு பயன்படும் என்பதே முக்கியம். இது பரபரப்பை உருவாக்கும் என்பதை விட, இது பயனுள்ளதை உருவாக்கும் என்பதே முக்கியம் !

முதன்மைகளை அறிவோம்,
வெற்றிகளை அடைவோம்

---

கருகுமணி: 04

# இன்கா இனத்தின் மச்சுபிச்சு நகரமும் தமிழ் இனத்தின் கீழடி நகரமும்




இன்கா இனத்தின் மச்சுபிச்சு நகரமும் தமிழ்நாட்டுக் கீழடி நகரமும் இரு பெரும் புலவர்களின் கவிதைகளூடாக மேற்கிளம்பி வருதலைக் கண்டு நயந்ததை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இன்கா பேரரசு 1438இல் தென்னமெரிக்காவில் அமைக்கப்பட்டது. இன்கா பண்பாடு அதன் மீப்பெருமை கொண்ட கட்டிடக்கலை, தலைசிறந்த கல்வேலைப்பாடுகள், பதிவு செய்யும் முறைகள், சிக்கலான சமூக அமைப்பு, நம்பிக்கைகள், மற்றும் தொழில்நுட்பங்களுக்காக இன்றுவரை மக்களைக் கவர்ந்து வருகிறது. அப்பேரரசின் தலைநகரின் 50 கி.மீ. தூரத்தில் உள்ளதாக மலைஉச்சியில் மச்சுபிச்சு நகரம் அமைந்திருந்தது. இன்கா பேரரசின் அழிவுடன் மச்சுபிச்சு மலைக்கோட்டை நகரமும் அழிவுற்றது. நோபல் பரிசு பெற்ற சிலி நாட்டுக் கவிஞர் பாப்லோ நெருதா (Neruda) 1943 இல் இம்மலை நகரின் அழிவெச்சங்களைப் பார்த்த பின்னர் 12 நீண்ட கவிதைகளைப் பாடினார்.

> **“மறைந்த இன்கா இனத்து மக்களின்
> தொன்மைச் சின்னங்களைக் கண்டு
> மச்சுபிச்சு பூமிக்குள்ளும் தனக் குள்ளும்
> பயணம் போகிறான் நெருதா
> கவிதை அவனுடன் சிறகடித்துப் பறக்கிறது.
> இன்கா இனம்
> பூமியின் அடி ஆழங்களிலிருந்து
> புறப்பட்டு மேலே வருகிறது“**

என்று தமிழ்நாட்டுப் பெரும் புலவர் ஈரோடு தமிழன்பன் பாடுகிறார்.

அழிவுண்ட மச்சுபிச்சு நகருக்குள் கவிதைச் சிறகடித்துச் சென்ற நெருதா பற்றிப் பாடிய ஈரோடு தமிழன்பன் எங்களுடைய புதையுண்ட கீழடி நகருக்குள் கவிதைப் பயணம் மேற்கொண்டு “கீழடியில் கேட்ட தாலாட்டுகள்“ என்னும் கவிதைகளைப் பாடியுள்ளார். ஒரு பாடல்,

> **“இரண்டா யிரத்து அறுநூறு
> ஆண்டுகள் கடந்து,
> பயணம்போய்ப் பழங்காலத்துள்
> நிற்கிறேன்
> ஒரு வீட்டின்முன்...“**



தகைசால் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

என்று தொடங்குகிறது. அண்மைக் காலத்தில் கீழடி அகழாய்வு எங்களுக்கு வியப்பான பல தகவல்களைத் தரும் பொருட்களையும் கட்டடங்களையும் எழுத்துருக்களையும் வெளிக்கொணர்ந்துள்ளது. கி.மு. 600 ஆண்டுகளுக்கு முன்னான ஒரு பெருநகரப் பண்பாட்டின் இடமாகக் கீழடி இருந்திருக்கவேண்டும் எனக் கூறியுள்ளனர். இன்கா நாகரிகத்தின் மச்சுபிச்சு பண்பாடு நெருதாவின் கவிதைகளாலே மேற்கிளம்பியதைப் போல பெருங்கவிஞர் தமிழன்பனும் கீழடி பூமிக்குள்ளும் தனக்குள்ளும் பயணம் போகிறார். கவிதை அவருடன் சிறகடித்துப் பறக்கிறது. தமிழினத்தின் நகர நாகரிகம் பூமியின் அடி ஆழங்களிலிருந்து புறப்பட்டு அவர் கவிதைகளிலே மேலே வருகிறது. இன்கா இனத்துக்கு நெருதாவின் மச்சு பிச்சுக் கவிதை போல தமிழ் இனத்துக்கு தமிழன்பனின் கீழடியில் கேட்ட தாலாட்டுகள் கவிதை அமைகிறது.




# என் நிலத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாய் காதலிக்க முடியும் என்ற என் ஒற்றைப் பிடிமானம்





டிலோஜினி மோசேஸ்
(இலங்கை)

குறிப்பிட்டதொரு வயதிலிருந்தே எல்லோருக்கும் போல எதிர்காலம் பற்றிய கனவுகளும் திட்டமிடல்களும் எனக்கும் இருந்து கொண்டேயிருந்தன. வயதும், அறிவும், அனுபவமும் மாறும் போது இலக்குகளும் மாறிக்கொண்டே இருந்தன.

ஆனால் என்றைக்குமே இந்த தேசத்தை விட்டு இன்னொரு மண்ணில் குடியேறும் எண்ணம் வந்ததேயில்லை. போரோடும் இயற்கை அனர்த்தங்களோ–டும் மாறி மாறி அல்லாடி கொண்டு, உயிரை மட்டுமே கையில் பிடித்துகொண்டு ஓடிய நாட்களில் கூட அந்த எண்ணம் தலை தூக்கியதேயில்லை.

நினைத்த மாத்திரத்தில் ஓடிப்போய் தொபுக்கென குதித்து நீந்த கூடிய இந்து மகா சமுத்திரத்தின் ஓசை சதா காதில் கேட்கும் ஒரு நிலத்தில்

பிறந்து போர் தன் தலை விரித்து உச்ச தாண்டவம் ஆடும் போது கூட பசியையும் பட்டினியையும் நுகராமல் வளர்ந்த ஒரு காரணத்தாலோ அல்லது அந்த வயது என்பது எந்த பொறுப்பும் இல்லாமல் நினைத்ததெல்லாம் சரி யானவை என்கிற பட்சத்தில் அவற்றை காலடியில் சாத்தியமாக்கும் ஒரு அப்பனுக்கு பிள்ளையாக பிறந்து போதிய சுதந்திரமாக இருந்ததாலோ இந்த தேசத்தில் அத்தனை காதல் இருந்தது.

சிறுவயதில் நான் ஆழமாகிய நம்பி

யிருந்த தமிழ் தேசிய அரசியல் கோட்பாடுகளின் படி நான் நேசித்த தமிழீழமாயினும் சரி, பிறகு இன்றைக்கு மனதார காதலிக்கும் ஈழமாயினும் சரி இந்த புலத்திலிருந்து பெயரும் ஒரு எண்ணம் எனக்கு வந்ததேயில்லை.

சொல்ல போனால் பதின் மங்களுக்கு பிறகு வெளி நாட்டு மாப்பிள்ளை கனவோடு திரியும் தோழிகளை அடி மனதில் ஒரு ஏளனத்தோடு கூட கடந்ததுண்டு.

இன்றைக்கு பொருளாதாரம் சரிந்தி

ருக்கிறது,எதை கேட்டாலும் இல்லை என்கிற துயரோடு இருப்பவையும் ஆனை விலை குதிரை விலை என்பது கூட துயரமாயில்லை. ஆனால் வாழ்வில் அடுத்த கட்ட நகர்வுக்கான எல்லா முகாந்திரங்களும் அடைக்கப்பட்ட நிலையில், இதுவரை எம்மை சுமந்த தோள்களுக்கு ஓய்வு கொடுத்து ஓய்யாரமாய் உட்கார வைக்க வேண்டிய அறம் சார்ந்த கடமையை நிறைவேற்ற முடியாமல் தடுமாறி கொண்டு நிற்கும் ஒரு சபிக்கப்பட்ட தலைமுறையின் பிரதிநிதிகளாக தூக்கம் தொலைத்து விட்டு உட்கார்ந் திருக்கும் ஒவ்வொரு இரவிலும் “ எனக்கு இந்த மண்ணை விட்டு ஒரு இடமும் போக விருப்பமில்ல...“ என்று உறுதியாக சொல்லும் அந்த குரல் வெளியே எழும்புவதேயில்லை.

போகிற போக்கில் இங்கிருந்து எங்கா

வது போய் மிச்ச கடமைகளையாவது சரியாக செய்து கொண்டு அடுத்த தலை முறையை என்றாலும் கொஞ்சம் நிம்மதியாக வாழ வைக்கலாமே என்று எழுகிற மனச்சாட்சியின் குரலை எத்தனை நாளைக்கு தான் அடக்கி வைக்க முடியும்!! இன்னமும் இந்த நிலத்தை, பெற்றோரும் அவர் பெற்றோரும் உலாவிய வீட்டை, முற்றத்தை, கடலை,காடுகளை, வரப்பு தண்ணீரில் குளித்து பச்சை வயலோரம் சிறகுலர்த்தும் வெள்ளை கொக்குகளை, ஊருக்கு போகும் விழியில் தம் பாட்டில் மேயும் மயில்களை,மான்களை குறுக்கே பாயும் முயல்களை தேகம் வருடும் காற்றை என்று எல்லாவற்றையும் இன்னும் கொஞ்சம் ஆழமாய் காதலிக்க முடியும் என்ற ஒற்றை பிடிமானம் தவிர மீந்திருப்பது ஒன்றுமேயில்லை.

கடலும்நானும்.....

சில மனிதர்களை போல இந்த கட லுக்கு அணைக்கவும் தெரியும் அடிக்கவும் தெரியும். எவ்வளவுக்கு வலிக்க அடிக்கிறதோ,அதே அள வுக்கு அலையால் கால் தடவி ஆறுதல் சொல்லவும் தெரியும். அதனால் அறுத்து கொண்டு போக முடிவதில்லை.

## யேர்மனி சுவேற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலய கட்டிடநிதிக்காக இடம் பெற்ற அதிஸ்டலாபச் சீட்டு !



**பரிசும், பரிசு பெற்றவர்கள் இலக்கங்களும்!**

யேர்மனி சுவேற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலய கட்டிடநிதிக்காக ஆலய அடியார்களின் பங்களிப்புடன் அதிஸ்டலாபச் சீட்டு இழுப்பு கடந்த (17.04.22) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணிக்கு ஸ்ரீகனகதுர்க்கா ஆலய திருமணமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் வெற்றியடைந்த எண்கள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த எண்களை உடையவர்கள் ஆலய நிர்வாகசபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். இதில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வண்ணம், ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலய நிர்வாகசபையினர்.
தகவல்: “ஆன்மீகத்தென்றல்“தம்பி. புவனேந்திரன்

**பரிசும், பரிசு பெற்றவர்களது இலக்கமும்**

ஒரு தங்கக் காசு.
இலக்கம் 449,
ஒரு கிறைண்டர்
இலக்கம்: 102,
ஒரு Mayas Gutschein
இலக்கம்: 408
ஒரு Car Wash இலக்கம்: 480,
ஒரு Car Wash இலக்கம்: 420









# நமது பிரபஞ்சத்திற்கு அழிவு உண்டா?

## பூமியின் கண்டங்கள் அனைத்தும் ஒரே கண்டமாகிவிடும்




நீங்கள், நான், இந்த உலகம், வேறொரு உலகம், சூரியன், கோள்கள் என அனைத்தும் நிரந்தரம் இல்லை. அனைத்துக்கும் எப்போதாவது அழிவு என்பது நிச்சயமாகும். ஆனால் அது எப்போது, எப்படி என்பது குறித்த பலதரப்பட்ட கருத்துக்களும், பரிந்துரைகளும், விவாதங்களும் பல இடங்களில் நடைபெறுகின்றன. அப்படி என்ன தான் நடக்கப்போகிறது? அதைப் பற்றி கொஞ்சம் பார்ப்போமா...?

இந்த பிரபஞ்சத்தின் (Universe) தற்போதைய வயது 13.7 பில்லியன் ஆண்டுகள் ஆகும். பெரு வெடிப்புக் கோட்பாடு (Big Bang Theory) மூலமாகத்தான் இந்த பிரபஞ்சம் உருவானதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். ஒரு சிறிய பொதித்துவைக்கப்பட்ட பொருளில் இருந்து பெரிய வெடிப்பின் மூலம் ஒரு வினாடிக்கும் மிக மிக மிக மிக மிக மிகக் குறைவான காலத்தில் விரைவாக வெடித்து வெளியேறியது. இதற்கு Inflation என்று பெயர் ஆகும். பெருவெடிப்பிற்குப் பின்னர் அடுத்த 380.000 ஆண்டுகளுக்குப் பின்னர் அதிலிருந்த பொருட்கள் குளிர்ச்சி அடைந்து, குறைந்த அடர்த்தி கொண்டதாக மாறியது. அவற்றைத்தான் நாம் இப்போது பார்க்கிறோம். இந்த காலகட்டத்தில்தான் மிகச்சிறியதாக இருந்த அணுக்கள் உருவாகி தம்மைத்தாமே நிலைப்படுத்திக்கொள்ளத் தொடங்கின. பின்னர் இலகுவான ஹைட்ரஜன், ஹீலியம் மற்றும் லித்தியம் போன்றவை உருவாகத் தொடங்கின. ஆனால் இந்த காலகட்டத்தில் எவ்வித நட்சத்திரங்களும் தோன்றவில்லை. எவ்வித ஒளியுமின்றி பிரபஞ்சமே இருளில் மூழ்கியிருந்தது.

இதனால் 380,000 ஆண்டுகளில் இருந்து 400 மில்லியன் ஆண்டுகள் வரையிலான காலம் பிரபஞ்சத்தின் 'காஸ்மிக் இருண்ட காலம்' என்றழைக்கப் படுகிறது. அடுத்த அரை பில்லியன் ஆண்டுகளில் வாயுக்கள் மற்றும் இதர பொருட்கள் இணைந்து முதல் நட்சத்திரத்தினை தோற்றுவித்தன. பின்னர் அடுத்தடுத்து விண்மீன் கூட்டங்கள் உருவாகின.

பிரபஞ்சத்தின் விரிவாக்கம் குறையத் தொடங்கி ஈர்ப்பு விசையினால் அவை மீண்டும் இருந்ததுபோல் ஆவதற்கு முயற்சி செய்யத் தொடங்கின. பெருவெடிப்பு நடந்த 3.5 பில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் Dark Energy எனும் ஆற்றல், ஈர்ப்பு விசைக்கு எதிராகச் செயல்பட்டு பிரபஞ்சம் மீண்டு வருதலைத் தடுத்தது. இதனால்தான் பிரபஞ்சத்தினைப் பற்றிப் புரிந்துகொள்வது கடினமாக இருந்து வருகிறது. இது குறித்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருவெடிப்புக்கு ஒன்பது பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு நமது சூரிய மண்டலம் உருவானது. அதன் பின்னரே சூரியக் குடும்பத்தின் கோள்கள் உருவாகின. தொடர்ந்து அவை மேம்பட்ட நிலையில் தான் நாம் இருக்கிறோம். அதாவது பெருவெடிப்பு நடந்து 13,7 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு நாம் பூமியில் வசிக்கிறோம்.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

இதற்கடுத்து எப்படி உலகம் அழிவினைப் பெறும் என்பது குறித்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை ஏனென்றால் அப்போது நாம் இந்த உலகில் உயிருடன் இருக்கப்போவதில்லை. இருந்தாலும் அடுத்து என்ன நடக்கப் போகும் என்பதையும் தெரிந்துகொள்வதில் ஆர்வமாகத் தானே இருப்பீர்கள். வாங்க அதையும் சற்று உத்துப் பார்ப்போம்.

இனி வரும் காலங்களில் நிலவினால் பூமியின் சுழற்சி வேகம் குறையலாம், பூமியின் காலநிலை வேறுபாடுகள் அடையலாம். இதனால் அடுத்த ஒரு மில்லியன் ஆண்டுகளில் அழிவு நிகழ்வுகள் ஆரம்பிக்கும். நூறு மில்லியன் ஆண்டுகள் கழித்து டைனோசர் காலத்தில் விழுந்த விண்கல் போன்று விண்கற்கள் பூமியினைத் தாக்கலாம். ஆனால் அப்போது நாம் பூமியில் தான் இருப்போமா? அல்லது விஞ்ஞான வளர்ச்சியினால் வேறு கிரகத்திற்குச் சென்றுவிடுவோமா என்பது தான் தெரியவில்லை.

இப்போதிலிருந்து 250 மில்லியன் ஆண்டுகள் கழித்து பூமியின் கண்டங்கள் அனைத்தும் ஒரே கண்டமாகிவிடும். (அப்போது ஒரே கண்டத்தின் ஜனாதிபதி யார் என்ற கேள்வி எழும்? )இதற்குக் காரணம் பால்வழி அண்டத்தின் சுழற்சியாக இருக்கும். அடுத்த வரிசையில் இருப்பது சூரியன். 600 மில்லியன் ஆண்டுகள் கழித்து சூரியன் 'Red Giant' நிலைக்குச் சென்றுவிடும் என்று எண்ணப்படுகிறது. அப்போது சூரியனின் ஹீலியம் அதிகமாக வெப்பநிலையினை உருவாக்கி தற்போதுள்ள அளவினை விட நூறு மடங்கு பெரிய சூரியனை உருவாக்கிவிடும்.

இன்னும் 1.3 பில்லியன் ஆண்டுகளில் பூமியில் பாக்டீரியாக்கள், ஆல்காக்கள்

26 ஆம் பக்கம் பார்க்க...




om shakthi Astrological center

spritual Healer & psychic reader

HAND READING - LOVE READING
HOROSCOPE READING & FUTURE READING

solution: Love problem - marriage problem- Remove Badluck, Stress- Black magic & curse

sri om shakthi astrology center guruji: sriram, a very powerful astrologer, has been practicing astrology since ancient times by visiting the ashtadasha shakthi peethas in kashi and receiving om shakthi, mantra shakthi and vakshuthi through agora meditation tapas. any problem will be solved in 11 days


sri om shakthi Astrology centre காசியில் உள்ள அஷ்டாதஷ சக்தி பீடங்களுக்குச் சென்று அகோர தியான தவங்களால் ஓம் சக்தி, மந்திர சக்தி, வக்சுத்தி ஆகியவற்றைப் பெற்ற நாக துறவிகள் மற்றும் பழங்குடியனர் குருஜி: ஸ்ரீ ராம் , மிகவும் சக்தி வாய்ந்த ஜோதிடர் அன்றைய காலத்திலிருந்தே முகம், கை, ரேகை வேத்திலை போட்டு பார்த்து ஜோதிடம் பார்த்து வருகின்றனர்



PANDIT SRI RAM | Mob: 07424886222 |07417344229

Best Food Super market |30 loam pit hill, lewisham London SE13 7sw





வெற்றிமணி திருமண சேவை

மணமகன் தேவை

யேர்மனியில் MSC படித்து நெய்ஸ் நகரில் நிரந்தர வேலைசெய்யும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 30 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரிமணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கிறோம்.

பெற்றோர் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு. +49 1577 4318528

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் Gymnasium தில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு:- +49 1577 4318528

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்தற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar


Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# காலம் சென்ற மாஸ்டர் சிவலிங்கம் சில மனப்பதிவுகள்

மாஸ்டர் என்ற சொல் ஒருகாலத்தில் மட்டக்களப்பில் சிவலிங்கம் அவர்களையே குறிக்கும் சொல்லாக இருந்தது. இத்தனைக்கும் அவர் ஓர் பாடசாலை மாஸ்டர் அல்ல. பாடசாலையில் படிப்பிக்காத அவருக்கு, பலநூற்றுக் கணக்கான மாணவர்கள் இருந்தனர் மாஸ்ட்ராக அல்ல, மாமாவாக. அவர் குழந்தைகளின் உளத்தில் கொலு வீற்றிருந்தார். அவர் தனது 89 ஆவது வயதில் சென்ற மாதம் காலமானார். மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை அனைவரும் ஒரு கதை சொல்லியாக அதிலும் சிறுவர்களுக்கான கதைசொல்லியாக மாத்திரமே பார்க்கிறார்கள். நான் அறிந்த மாஸ்டர் சிவலிங்கம் இன்னும் வித்தியாசமானவர், அவருடனான முதல் சந்திப்பு பசுமையாக ஞாபகம் இருக்கிறது அப்போது நான் வந்தாறுமூலை மத்தியகல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன். காற் சட்டை போடும். வயது 13. எட்டாம் வகுப்பு அன்று. பாடசாலை பாரதிவிழா கொண்டாடுகிறது. அதற்கு அவர்கள் அன்றைய மட்டக்களப்பின் பிரபல பேச்சாளர்களான பிரபலமான செ,இராசதுரை, கமலநாதன் (அவர் வித்துவான் ஆகாதகாலம் அது) எஸ் பொன்னுதுரை ஆகியோரையும் அவர்களுடன் சிவலிங்கத்தையும் அழைத்திருந்தனர், முன்னவர் இருவரும் தமிழரசுக்கட்சி மேடைகளில் விளாசித் தள்ளி மக்கள் மத்தியில் பிரபலமானவர்கள். எஸ் பொன்னுத்துரை இன்னொரு விதத்தில் பிரபலமானவர். அவர்கள் அனைவரும் சிவலிங்கத்திலும் வயது கூடியவர்கள். சிவலிங்கத்தை மட்டக்களப்பு அதிகம் அறியாத காலம் அது. சிவலிங்கம் அப்போதுதான் தமிழ்நாட்டு வாசம் முடித்து மட்டக்களப்பு திரும்பியிருந்தார். தமிழ்நாடு சென்று வருவது என்பது அன்று பெரிய விடயம்.

சிவலிங்கம் தனது பேச்சில் தனது தமிழ் நாட்டு அனுபவங்களைச் சுவையாக கூறினார். அவர் அப்போது ஒரு மிமிக்கிறிக் கலைஞராக வளர ஆரம்பித்த காலம் அது, அவர் அன்றைய முதலமைச்சர் காமராஜர் போல திராவிடக்கழக தலைவர் ஈ.வே.ரா போல, திராவிட முன்னேற்றக்கழக தலைவர் அண்ணாதுரைபோல கருணாநிதி போல சினிமா நடிகர் என்.எஸ்.கிருஸ்ணன் போல சிவாஜி கணேசன் போல தனது குரலை மாற்றி மாற்றி செய்து அவர்கள் பேசுவது போல பேசிக் காட்டினார். சிறுவர்களாகிய எங்களுக்கு ஒரே ஆச்சரியம் குசி சந்தோசம் கைதட்டல் பெரு வியப்பு. “பச்ச



எடுத்து முஸ்துல அடிச்சன் ஜஸ்து புடிஸ்து“ என்று மெட்ராஸ் தமிழை அப்படியே கூறி அதற்கான அர்த்தத்திதையும் விளக்கினார். பச்சத் தண்ணியை எடுத்து முகம் கழுவினேன் ஜலதோசம் பிடித்துகொண்டது. என்றது அதன் அர்த்தம். பஸ்து என்றால் பச்சத்தண்ணி என்பது அர்த்தம் முஸ்து என்றால் முகத்தில், என்பது அர்த்தம் ஜஸ்து என்றால் ஜலதோசம் என்பது அர்த்தம். புடிஸ்து என்றால் பிடித்துகொண்டது என்பது அர்த்தம். என அவர் விளக்கியபோது எமக்குப் புதிய உலகங்கள் விரிந்தன.

கிருஸ்ணா ஒயில் உங்களுக்குத் தெரியுமா? என சிறுவர்களான எங்களிட்ம் கேட்டார், தெரியாதே என்றோம், இது என்ன கிருஸ்ணா ஒயில் ஃ கிரெசன் ஒயிலை மெட்ராஸ்காரன் கிருஸ்ணா ஒயில் என்று அழைத்ததை “கிருஸ்ணா ஒயில் கிருஸ்ணாஒயில் வாங்கோ வாங்கோ“ எனஅப்படியே கூவிக்காட்டினார். அவரது உடல் குரல் கண் அனைத்தும் பேசின. கிரசன் ஒயில் தான் நமது லாம்பெண்ணெய் அதாவது மண் எண்ணெய். மிகச்சிறந்த பேசாளர்களான செ.இராசதுரை, கமலநாதன் எஸ் பொன்னுதுரை ஆகியோரின் பேச்சுகளை விட எம்மை அன்று மிகவும் கவர்ந்தது சிவலிங்கத்தாரின் பேச்சே! இந்தச் சிவலிங்கம் இந்தியா சென்றிருக்கிறார், நாம் நூல்களில் படித்த ஈ.வே.ரா பெரியார், அண்ணதுரை,கருணாநிதி போன்றோரைக் கண்டிருக்கிறார். அவர்களோடு பேசியிருக்கிறார் நாம் திரைப்படங்களில் கண்டு பிரமித்த என்.எஸ்.கிருஸ்ணன் சிவாஜி கணேசன் போன்ற சினிமா நடிகர்களைக் கண்டு உரையாடியுள்ளார் என்ற பிரமிப்பு, அப்பிரமிப்பு சிவலிங்கத்தார் மீதும் ஓர் பிரமிப்பை ஏற்படுத்தியது அந்தப் பிரமிப்பு தொடர்ச்சியாக அவர் செயல்கள் மூலம் வளர்ந்து வந்தது.

இது இன்னொரு அனுபவம் எனது 15 ஆவது வயதில் என நினைக்கிறேன் அப்போது அவருக்கு 25 வயது இருக்கும் சங்கிலியன் நாடகம் என நினைவு சிவலிங்கமும் அந்த நாடகத்தில் நடிக்கிறார்



பேராசிரியர்
**சி.மௌனகுரு (இலங்கை)**

அதில் ஒரு காட்சியில் அவருக்கு அரசன் கோபத்தோடு ஏச சடாரென்று முகத்தை அவர் திருப்பி அஸ்டகோணலாக்கிய காட்சி அப்படியே ஞாபகம் வருகிறது. என் அருகில் உட்கார்ந்திருக்கிறார் பாலு மாஸட்ர், அவர் ஒரு நாடக ஆசிரியர். எல்லாவற்றையும் எல்லாரையும் கிண்டல் பண்ணும் இயல்பினர் அப்படியான அவரே சிவலிங்கத்தாரின் அந்தக் கண்நேர நடிப்பில் மயங்கிச் “சபாஸ் சிவலிங்கம்“ என்று கூவி விட்டார் சபையிலிருந்து மாஸ்டர் சிவலிங்கத்திற்கு கிடைத்த அந்தப் பாராட்டு. இப்போது ஞாபகம் வருகிறது, ஆம் மாஸட்ர் சிவலிங்க சிறந்தவோர் நடிகர் பின்னாளில் நகைச்சுவை நடிகர் இந்த நகைசுவையை அவர் வளர்த்தெடுத்து பின்னாளில் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நகைசுவை மாமாவும் ஆனார்.

மேலும் உதவின இன்னொரு அனுபவம் 1956 1959 1960 களில் மட்டக்களப்பில் தமிழர்சுக்கடசியின் முக்கிய செயற்பாட்டாளர்களுள் ஓருவராக அவர் செயற்பட்டார். மட்டக்களப்புக் கச்சேரியை இயங்க விடாமல் பல மாதங்களாக நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் 1960 களில். இராணுவம் திடீரெனப் புகுந்து அங்கிருந்த அனைவரையும் அடித்து விரட்டுகிறது, அப்போது அந்த ஆமியால் அடிவாங்கியவர்களுள் ஒருவர் நமது சிவலிங்கம் அந்த அனுபவத்தைக்கூட ஒரு கூட்டத்தில் அவர் நகைசுவையாக இவ்விதம் பேசினார் நடு இரவு ஆமி வந்தது தெரிந்து விட்டது நித்திரை கொள்வதுப்போல பாசாங்கு செய்தவாறு படுத்துக் கிடந்தேன், அருகில் வந்த ஆமியில் ஒருவன் துவக்கு முனையால் குத்தி எலும்புடா எலும்புடா என்று கூறினான். எனது எலும்புடல் இவனுக்கு எப்படித் தெரிந்த்து? உடலப்பார்த்து இது மனிதர் அல்ல எலும்பு எலும்பு எனப் பகிடி பண்ணுகிறானோ என எண்ணினேன் வாயைச் சும்மா வைத்திராமல் எலும்புதான் ஐயா என்றேன். பளாரென எனக்கு ஓர் அறை கிடைத்தது, வாயை மூடிக்கொண்டேன் என்று நகைச்சுவையாக கூட்டத்தில் விபரிப்பார் மாஸட்ர் எழும்புடா எனும் தமிழ்ச் சொல்லை தமிழ் தெரியாத ஒரு ஆமிக்காரன் எலும்பு என உச்சரித்த கதையை அவர் கூறிய முறை இது இன்னொரு அனுபவம்.

அவர் வானொலி மாமா ஆகியமை இன்னொரு கதை. சிந்தாமணியில் சிறுவர் கதைகள் எழுதியமை இன்னொரு கதை. நல்ல கருத்துகளைக்கூற நகைச்சுவையை நாடகத்தை வில்லுப்பாட்டை ஊடகமாக் கொண்ட அவர் இந்த கருத்துகளை சிறுவர்களுக்கு விதைப்பதே தனது தலையாய பணியாக கண்டிருக்க வேண்டும். அதன் விளைவே அவர் கதை சொல்லும் மாமாவான கதை. தனது நாடக நடிப்பு. குரல் வளம் உடல் அசைவு கற்பனை அனைத்தும் இணைத்து அவர் குழந்தைகளுக்கு கதைசொல்வார் அவருக்கு ஒரு புத்தகம் மாத்திரம் போதும் அதில் விரல்களால் தட்டி குதிரை ஓட்டத்தைக் காட்டுவார். அவரது சொல்லும் ஒலியும் இணைந்து

29 ஆம் பக்கம் பார்க்க...








# இலக்கியத்தில் இவர்கள்... 22



கௌசி (யேர்மனி)

## கருப்பை எனும் கர்ப்பக்கிரகம் ஒரு உயிர் வரவுக்கான ஆய்வுகூடம்

கழுத்தில் தாலி ஏறிவிட்டால் புதுமணத் தம்பதிகளிடம் கேட்கும் அடுத்த கேள்வியாக அமைவது வயிற்றில் பூச்சி புழுக்கள் இல்லையா? என்பதே. இந்தக் கேள்வி தமிழர்கள் மத்தியில் கலாசாரமாகவே இருக்கின்றது. திருமணம் மூலம் அங்கீகாரம் வழங்கி அவர்களை இனத்தின் விருத்திக்குத் தயாராகச் செய்யும் கடமை தம்மிடம் இருப்பதாக பெரியவர்கள் கருதுகின்றார்கள். அந்தக் கருக்கட்டல் சரியான முறையில் ஏற்படுவதற்கும் அக்கருவைச் சரியான முறையில் வளர்த்தெடுப்பதற்கும் உரிய ஆலோசனைகளை வழங்குவதும் அவர்களின் கடமையாக இருக்கின்றது. முதல் இராத்திரிக்கு நாள் குறித்துக் கொடுப்பதும் இல்லையென்றால் தேனிலவுக்கு தம்பதியினரை



அனுப்பி வைப்பதும் ஒரு ஆரோக்கியமான குழந்தையை உலகத்துக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கமாக அமைகின்றது. இச்செயற்பாடு எந்த அளவிற்கு இளந் தலைமுறையினரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பது தற்காலத்தில் கேள்விக்குறியாக இருந்தாலும் முறையற்ற உறவுகளால் கருத்தரித்தல் ஏற்படுவது இக்காலத்தில் சர்வசாதாரணமாக இருக்கின்றது. இதனால் கருச்சிதைவுகள் நடைபெறுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. உருவான குழந்தையை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலமோ வீட்டில் மருத்துவச்சியை அழைத்தோ குழந்தைப் பேறை கவனமாகச் செய்கின்ற முறை ஐரோப்பிய நாட்டிலும் இருக்கின்றது.

குழந்தை வயிற்றில் உருவாவதற்கு எடுக்க வேண்டிய முயற்சிகள், எப்படி வளர்கின்றது, எவ்வாறு வளர்த்தெடுக்கப்படுகின்றது. ஏன் பிள்ளைக்குக் குறை பாடுகள் ஏற்படுகின்றன. பிள்ளையை எப்படி வெளியே இலகுவாக எடுப்பது. கருசசிதைவு செய்வது என்பன பற்றி நற்றிணை, புறநானூறு, திருமந்திரம், குறுந்தொகை, பட்டினத்தார் பாடல்கள், போன்ற பல பாடல்களிலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அக்குழந்தை கருவாகின்ற காலத்திலே புல்லுக்கு மேலே விழுந்த பனித்துளியின் அளவிற்கு அந்த கரு இருக்கும் என்று அருணகிரிநாதர் தன்னுடைய திருப்புகழிலே பாடியிருக்கின்றார்.

அறுகுநுனி பனியணைய சிறிய துளி
பெரியதொரு ஆகமாகி என்கிறார்.

இதனைப் பட்டினத்தார் பாடுகின்ற போது.

**“ஒருமட மாதும் ஒருவனுமாகி**
**இன்ப சுகம்தரும் அன்பு பொருந்தி**
**உணர்வு கலங்கி ஒழுகிய விந்து**
**ஊறு சுரோணிதம் மீது கலந்து**
**பனியில் ஓர் பாதி சிறு துளி மாது**
**பண்டியில் வந்து புகுந்து திரண்டு**
**பதும அரும்பு கமடமி தென்று**
**பார்வை மெய் வாய்**
**செவி கால் கைகள் என்று**
**உருவமும் ஆகி உயர வளர் மாதம்**
**ஒன்பதும் ஒன்றும்**
**நிறைந்து மடந்தை உதரம் அகன்று**
**புவியில் விழுந்து**
**ஓரறிவு ஈரறிவாகி வளர்ந்து”**

என்று பாடிச் செல்கின்றார்.

இதனையே திருவாசகத்திலே அற்புதமாக கரு உருவாகி குழந்தையாக பிறப்பது பற்றி மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

**மானுடப் பிறப்பினுள் மாதா**
**வுதரத் தீனமில் கிருமிச்**
**செலவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின்**
**இருமையிற் பிழைத்தும்**
**இருமதி விளைவின்**
**ஒருமையிற் பிழைத்தும்**
**மும்மதி தன்னுள் அம்மதம்**
**பிழைத்தும்**
**ஈரிரு திங்களிற் பேரிருள்**
**பிழைத்தும்**
**அஞ்சு திங்களின் முஞ்சுதல்**
**பிழைத்தும்**
**ஆறு திங்களில் ஊறலர்**
**பிழைத்தும் ஏழு திங்களில்**
**தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களில்**
**கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு**
**துன்பமும் பிழைத்தும்**
**தக்க தசமதி**
**தாயொடு தான்படும்**

மனிதப் பிறப்பிலே தாயின் வயிற்றிலே கருவுறுகின்ற போது அதனை அழிப்பதற்குச் செய்யும் குறைவில்லாத புழுக்களின் போருக்குத் தப்பியும், முதல் மாதத்தில் தான்றிக்காய் அளவுள்ள கரு இரண்டாகப் பிரிவு படாமல் தப்பியும், இரண்டாம் மாதத்தில் நடக்கின்ற காரியங்களாலே உருக்கெடுவதிலிருந்து தப்பியும், மூன்றாம் மாதத்தில் தாயின் மதநீர்ப் பெருக்குக்குத் தப்பியும், நான்காவது மாதத்தில் அம்மத நீர் நிறைவினால் உண்டாகும் பெரிய இருளுக்குத் தப்பியும், ஐந்தாவது மாதத்தில் உயிர் பெறாது இறப்பதிலிருந்து தப்பியும், ஆறாம் மாதத்தில் கருப்பையில் சொறி மிகுதியால் உண்டாகிய துன்பத்தினின்று தப்பியும், ஏழாவது மாதத்தில் கருப்பை தாங்காமையால் பூமியில் காயாய் விழுவதனின்று தப்பியும்(குறைப்பிரசவம்), எட்டாவது மாதத்தில் வளர்ச்சி நெருக்கத்தினால் உண்டாகும் துன்பத்தினின்று தப்பியும்(இட நெருக்கழ), ஒன்பதாவது மாதத்தில் வெளியே வர முயல்வதால் வருந்துன்பத்தினின்று தப்பியும், குழவி வெளிப்படுதற்குத் தகுதியாகிய பத்தாவது மாதத்திலே தாய் படுகின்ற கடல் போன்ற துன்பத்தோடு துயரத்தினின்று தப்பியும், பூமியிற் பிறக்கின்றது.

இவ்வாறு பிறக்காது காந்தபுரத்து மன்னன் மகள் பிரசவ வேதனையால் துடித்தபோது நறையூர் மருத்துவச்சி அவளுடைய வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்ததாகக் கொங்கு மண்டல சதகம் 92 ஆவது பாடலிலே பாடப்பட்டுள்ளது. இந்நூல் 11 ஆம் நூற்றாண்டு எழுதப்பட்டது.

**குறைவறு தெண்ணீர்**
**நதியணை காந்தபுரத் தொரு நல்**
**லிறை மகளார் மக வீனப்**
**பொறாதுட லேங்க வகிர்**
**துறை வழி பேற்று மகிழ்வூட்டு**
**மங்கல தோன்றி வளர்**
**மறைவழி நேர் நறையூர்நாடு**
**சூழ் கொங்கு மண்டலமே**

என அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தை பிறந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றெடுக்கும் பிள்ளைகளைக் கருச்சிதைப்பது பற்றிக் கூறும் போது இது ஒரு பாவச் செயல் எனவும் மருத்துவர்களோ மற்றவர்களோ அதற்கு ஊக்கமளிக்கக் கூடாது என புறநானூற்றுப் பாடல் எடுத்துரைப்பதில் இருந்து அக்காலத்தில் கருச்சிதைவும் நடைபெற்றிருக்கின்றது என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

கருப்பை என்பது கர்ப்பக்கிரகம் போன்றது. அங்கு பரிசுத்தமான ஒரு உயிர் உற்பத்தி நடைபெறுகின்றது. ஆணும் பெண்ணும் தம்முடைய எதிர் கால வாரிசை உருவாக்க எடுக்கும் முயற்சியின் ஆய்வுகூடம். இதனாலேயே இக்கரு வளர்ச்சி சிறப்பாக அமைய என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி பழைய தமிழ் இலக்கியங்கள், சித்தர் பாடல்கள் அற்புதமாக எடுத்துக்காட்டியிருக்கின்றன.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மில்க்வைற் சோப் ஏழைகளின் தோழனாகவும்

## மத்திய வர்க்கத்தின் காவலனாகவும் விளங்கியது







வீட்டு முற்றத்தில் வளர்ந்து பரப்பியிருக்கும் வேப்ப மரங்களில் இருந்து காற்றுக்கு உதிரும் வேப்பம் பழங்கள் பொத்துப் பொத்தென்று மண்ணில் விழும். இரண்டு விரல்களை வளையமாக்கி அதில் வைத்து ஊதி ஊதி மண்ணைத் துரத்தி விட்டு வேப்பம் பழத்தின் கசப்பைச் சுவை பார்த்திருக்கிறேன். காய்ந்து உலர்ந்து போன வேப்பங்கொட்டைகளைக் குவித்து வைத்து அவற்றை இரவில் ஒரு சட்டி தணலில் போட்டு எரிக்கும் போது வெளிப்படும் புகை மண்டலம் வீட்டுக்குள் அழையா விருந்தாளிகளாக வரும் நுளம்புக் கூட்டத்தை (கொசு) விரட்டியடிக்கும்.

இந்த வேப்பம் கொட்டைகளுக்கு இன்னொரு பயன் இருப்பதை அப்போது நான் அறிந்து கொண்டது நம்மூர்த் திருவிழாக்களில் தான். மருதடிப் பிள்ளையார் கோயிலிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும் திருவிழா நாட்களில் "மில்க்வைற்" நிறுவனம் கடை பரப்பியிருந்தது. அப்போது ஒரு அறிவிப்பை அச்சிட்டுப் பகிர்ந்தார்கள். ஒரு கிலோ வேப்பம் கொட்டை கொடுத்தால் ஒரு மில்க்வைற் தொப்பி கிடைக்கும் என்பது தான். விடுவேனா நான். வாசுகி திருவள்ளுவருக்குக்கு நிலத்தில் விழுந்த சோற்றுப் பருக்கைகளை ஊசியால் ஒற்றி எடுத்துக் கொடுத்தது போல வீட்டு முற்றமெல்லாம் தேடித் தேடி வேப்பங் கொட்டை பொறுக்கினாலும் அந்த மருதடிப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழாவுக்கு மில்க்வைற் இடம் தொப்பி வாங்க ஒரு கிலோ தேறவில்லை. என்னுடைய திடீர் ஆர்வக் கோளாறைப் பார்த்து விட்டு அம்மம்மாவும் அயலட்டையில் பொறுக்கிக் கொஞ்சம் தந்தார். ஏறக்குறைய ஒரு கிலோ தேறிய அந்த வேப்பங்கொட்டைச் சரையைச் சைக்கிள் கரியரில் கிடத்தி வைத்து, மருதடிப் பிள்ளையார் கோயிலில் கடை விரித்திருந்த மில்க்வைற் நிறுவனத்தின் தற்காலிக விற்பனை மேம்படுத்தல் கூடத்தில் கொண்டு போய்க் கொடுத்தேன். நிறுத்துப் பார்த்தார்கள். "ஒரு கிலோவுக்குக் கொஞ்சம் குறையுது ஆனாலும் பறவாயில்லை தம்பிக்கு ஒரு தொப்பி குடுங்கோ" என்று முகப்பில் நின்ற ஒருத்தர் கட்டளையிட



■ மில்க்வைற் கனகராசா

ஒரு வெள்ளைத் தொப்பி எனக்குப் பரிசாகக் கிடைத்தது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுதேச உற்பத்திகள் செழிப்போட்டு இருந்த நேரம் "மில்க்வைற் தொழிலகம்" தம் பங்குக்கு சோப் உற்பத்தியில் பெரும் தொழிற் புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. குளிக்க, உடுப்பு தோய்க்க என்று வித விதமான சவர்க்காரங்கள். நம்மூரில் சோப் ஐ சவுக்காரம் (சவர்க்காரம்) என்போம். என்னைப் போலவே பலரும் சேமித்துக் கொடுத்த வேப்பங் கொட்டைகளைச் சுத்தம் செய்து நுளம்பை விரட்ட மில்க்வைற் வேப்பங்கொட்டைகள் என்றும், அந்த வேப்பங்கொட்டைகளை மூலப் பொருளாக உபயோகித்து "நீம் சோப்" என்றும், வேப்பெண்ணெய் என்றும், "நீமியா" உரம் என்றும் மில்க்வைற் ஸ்தாபனத்தார் உற்பத்திகளை விரித்திருந்தனர்.



கானா பிரபா
(அவுஸ்ரேலியா)

என்னதான் நம்மூர் உற்பத்தி என்றாலும் நம்மூர் தானே என்ற ஏளனத்தால் மில்க்வைற் பொருட்களை பணக்கார வர்க்கம் அதிகம் சீண்டாது. ஆனாலும் என்ன மில்க்வைற் சோப் ஏழைகளின் தோழனாகவும், மத்திய வர்க்கத்தின் காவலனாகவும் அப்போது விளங்கியது. என்னுடைய அம்மம்மாவுக்கு மில்க்வைற்றின் நீம் சோப் போட்டுக் குளித்தால் தான் பொச்சம் தீரும். லைஃப் போய் சோப்புக்கு நிகரான சுகம் அவருக்கு. நீம் சோப்பைப் போட்டு விட்டு குளித்து விட்டு கமுக மரத்தில் முதுகைத் தேய்த்து விடுவார். அவரளவில் அவருக்குக் கிட்டும் மசாஜ் அது.

"அழகு ராணிகளின் சோப்" என்று ஸ்ரீதேவி, பூனம் தில்லான் போன்ற அழகிகளின் முகம் போட்டு வெளி வந்த லக்ஸ் சோப், ராணி சோப் இவற்றில் தான் பணத்தில் குளிப்போருக்கு மோகம் அதிகம். உடுப்புத் தோய்க்க இருக்கவே இருக்கு சன் லைற் சவுக்காரம். அந்தக் காலத்தில் எங்கள் உறவினர் பெரும் வர்த்தகராக இருந்த காலத்தில்



■ சிற்பம் ஓவியர் கண்ணா- 1971

இந்த சோப் நிறுவனங்களின் விளம்பரச் சுவரொட்டிகள் வழு வழுப்பான காகிதங்களில் கிடைக்கும். ஒரு சுவரொட்டியை வைத்து மூன்று அப்பியாசக் கொப்பிகளுக்கும், பாட விளக்கக் குறிப்புகளுக்கும் (கோனார் நோட்ஸ்) உறை போடலாம்.

அப்போது அந்தச் சவர்க்கார உறைகளின் உட்புறம் போட்டிகள் எல்லாம் அச்சிடப்பட்டிருக்கும். தங்க நாணயம் கிடைக்கும், கார் கிடைக்கும் என்றெல்லாம் அந்தப் போட்டியில் சோப் கம்பனிக்காரர் ஆசை காட்டுவார்கள். ஆனால் போட்டியில் பரிசு விழுவது என்னவோ அம்பாந்தோட்டை பியதாசாவுக்கோ அல்லது அனுரதபுரம் குசுமாவதிக்கோ தான். இங்கேயும் கை கொடுப்பது மில்க்வைற் தான். பத்து நீம் சோப் உறைகளை அனுப்பி ஒரு திருக்குறள் புத்தகத்தை வெல்லுங்கள், ஒரு தேகப்பியாசப் புத்தகத்தை வெல்லுங்கள். "பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்" என்றெல்லாம் சவர்க்கார உறைகளில் அச்சிட்டு மில்க்வைற் காறர் உள்ளூர் மக்களைக் கவர்ந்திழுப்பார்கள். அம்மம்மாவிடம் கெஞ்சிக் கூத்தாடி நீம் சோப் உறையைப் பிரித்து எடுத்து விட்டு ஒரு சோப்பு டப்பாவில் அந்தச் சோப்பைப் போட்டுக் கொடுத்து விட்டு "நீம் சோப்" உறைகளை மில்க்வைற் நிறுவனத்துக்குத் தபால் மூலம் அனுப்பி புத்தகங்களை வாங்குவோம்.

அரிவரியில் ஆனா ஆவன்னா எழுதிப் பழகப் பனையோலையில் அரிச்சுவடி செய்து பள்ளிக்கூடங்களுக்கும், கோயில்களுக்கும் அனுப்புவதில் இருந்து ஆத்திசூடி நீதி நூல் வாசகங்கள் கொண்ட ஸ்டிக்கர்களை அச்சிட்டு விநியோகிப்பது, "மில்க்வைற் செய்தி" என்ற சமூக, சமய, அறிவியல் சார்ந்த பத்திரிகையை வெளியிடுவது என்று மில்க்வைற் கனகராசா அவர்களின் பணி விரிந்தது அதனால் அவருக்குச் சிவ தர்ம வள்ளல் என்ற பட்டமும் கிட்டியது. ■

24 ஆம் பக்கம் பார்க்க...

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"




Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com

aaDaa Finance 0798000100



finma : 34598 cicero : 25605



# தனிமை அவ்வளவு கடினமானது!

## I need privacy , I love privacy, I want privacy

இதனை உணர்ந்திட கொஞ்சம் காலம் எடுக்கும். இளமையும் துடிப்பும் நம்மை ஆரம்பத்தில் தனிமை படுத்துவதில் அவ்வளவு பிரயத்தனமான பிரியத்தை வெளிக்கொணரும். நம் ஆறாவது அறிவுக்கு தனிமை ஒரு கொடையாகவே தோன்றும். தனிமையை கொண்டாடும் பாடல் தெரிவுகளை play list ல் வைப்பதும் அதனை பலமுறை கேட்டு இரசிப்பதுமாக இருப்பதும் நமக்குள் இவை யாவும் ஒரு கெத்து moment என்று எண்ணத்தை நெஞ்சில் பச்சை குத்திவிடுகிறது.



ஆர்கலி
(இலங்கை)

காரணம் ஐ need privacy , I love privacy, I want privacy என்ற அர்த்தம் புரிந்திடாத கோட்பாடு தான். தனிமையில் இருப்பது எப்படி privacy ஆகும், தனியாக இருந்து தொலைபேசியில் மூழ்குவது எப்படி privacy ஆகும் , எனது அறை எனது பொருட்கள் எனக்கான ஒதுக்கங்கள் என நம்மை மட்டுப்படுத்தல் எப்படி privacy ஆகும். வாழ்வின் அத்தியாயங்கள் யாவும் தனிமையை தின்றுவிடும் மிடுக்கான சந்தோசங்களால் ஆனதே.

இங்கு privacy என்பது தனியாதல் அல்லது தனித்திருத்தல் என்று மொழிபெயர்த்து அர்த்தம் பார்த்துவிட் டோம். தனியுரிமை வேறு தனி யாதல் வேறு.

ஒரு கட்டுரையை கூட குறித்த space வழங்காது தொடர்ச்சியாக எழுதி விட்டால் அர்த்தம் புரியாது அழகும் இருக்காது. அதனால் அவை அவற்றுக்கான space கொடுப்பதற்கும் நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு சில கணங்கள் நம்மை தனிமைப் படுத்தி அழகுபடுத்தினாலும் குறித்த கட்டத்தின் பின் இயல்பாகவே நம் மனது அருகில் ஒரு நண்பரையோ மடியில் தலை சாய ஒரு தாய்மையையோ கட்டியணைத்து நெஞ்சில் கண்ணீர் சிந்துவதற்கு ஒரு சிறந்த வாழ்க்கைத் துணையையோ தோளில் கண்ணுறங்க ஒரு சகோதரத்தையோ என்றும் எதிர்பார்த்து தேடி ஓட இந்த நெஞ்சம் கட்டளை இட்டுவிடும்.

நம் நிழலே நம் துணை நாடும் போது நாம் யாவரும் அவற்றின் அசல், பிறகெப்படி தனிமை விரும்புவோம். பாதியில் ஒட்டிக் கொண்ட தனிமையை மீண்டும் பாதியிலே கழற்றிவிட்டு நம் பாதையின் வழித்தடங்களில் குறைந்தது ஒருவரையயாவது அழைத்தவாறு அல்லது குறைந்தது ஒருவருடைய வழித்தடங்களையாவது பின்பற்றியவாறு நம் பயணத்தை நிகழ்த்திக் கடக்கிறோம் என்பதே நிதர்சனம்.

தனிமையும் அப்படித்தான் என்றுமே தனிமையில் இருந்ததில்லை. அதனை இடைநடுவே விட்டுச்சென்ற நம் எல்லோரின் துரோகத்தையையும் இணைத்து அது அதன் பாதையில் பயணத்திக் கொண்டுதான் உள்ளது.

– **அன்பு பகிர் தனிமை தவிர்**

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மில்க்வைற் சோப் ஏழைகளின் தோழனாகவும்

அவருக்கு உறுதுணையாக எழுத்து முயற்சிகளுக்குப் பொறுப்பாக அறிஞர் க.சி. குலரத்தினம் விளங்கினார். (மில்க்வைற் நிறுவனம் பற்றி நீண்ட விரிவான கட்டுரை எழுத வேண்டும் அதைப் பின்னர் தருகிறேன் இப்போது சோப்புடன் மட்டும் ஒட்டிக் கொள்கிறேன்)

இது இவ்வாறிருக்க இரண்டாம் கட்ட ஈழப் போர் கனத்த போது இலங்கை அரசின் பொருளாதாரத் தடை தமிழர் பிரதேசங்களுக்கு அமுலாகியது தொண்ணூறுகளின் முற்பகுதியில். பெற்றோல், டீசல் உட்பட ஐம்பத்துச் சொச்சம் பொருட்களைப் பட்டியலிட்டு இவை பயங்கரவாத நடவடிக்கையை முன்னிட்டுத் தடை செய்யப்படுகின்றன என்று இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. ஒரே இரவில் தானும் பயங்கரவாதி ஆக்கப் படுவேன் என்று ராணி சந்தன சோப்போ ஸ்ரீதேவி படம் போட்ட லக்ஸ் சோப்போ நினைத்திருக்கவில்லை அதே சமயம்,மில்க்வைற் நிறுவனம் ஒரே இரவில் யாழ்ப்பாணம் பூராக சூப்பர் ஸ்டாராக மாறியது.

அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் சோப் என்ற சவர்க்காரம் இல்லை. எனவே கடைகளில் மெல்ல மெல்ல குளிக்கும் சோப் இருப்புத் தீர்ந்து போகவும், உடுப்புத் தோய்க்கும் சன் லைட் சோப்புக்கோ அல்லது நோயாளிகளுக்கு என்று முத்திரை குத்தியிருந்த லைஃப் போய் சோப்புக்கும் மாறினோம். சோப்பைச் சின்னச் சின்னத் துண்டாக்கிப் பாவிப்பது, துணியில் சுருட்டிப் பாவிப்பது என்று சிக்கன நடவடிக்கைகள் அரங்கேறின. கொஞ்ச நாளில் இருப்பில் இருந்த எல்லா சோப்பும் கடைகளில் காலியாகின. கையிருப்பில் இருந்த பகட்டான சவுக்காரங்கள் தீர்ந்து போக, தாய் வீடு தேடி வரும் மகள் போல எல்லாரும் மில்க்வைற் சோப் நோக்கி ஓடினோம். மில்க்வைற்றின் ஆயுட் கால நீம் சோம் வாடிக்கையாளர் எங்கட அம்மம்மா கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டிருந்திருப்பா அப்போது. மில்க்வைற் சோப் விலை மலிவு என்றாலும் வேகமாகக் கரையக் கூடியது. வாசனை திறம் என்றோ திறமற்றதன்றோ என்று இல்லாத ஒரு மோன நிலையில் இருக்கும். என்னதான் உள்ளூர் உற்பத்தியாக இருந்தாலும் சோப் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களுக்குத் தென்னிலங்கையையே தங்கியிருக்க வேண்டிய சூழல் நிலவியதால் மில்க்வைற் தொழிற்சாலையும் மெல்ல முடங்கிப் போக, இப்போது மில்க்வைற் சோப்பும் இல்லாத மாதங்களாக நீண்டன.

சீயாக்காய் (சிகைக்காய்) அரப்பு அரைச்சுத் தலையில குளிச்சால் தான் பொச்சம் தீரும் என்ற கொள்கையோடு வாழும் என் அம்மாவுக்கு ஷாம்பூ இல்லாதது கூடப் பொருட்டில்லை. “தம்பி! நீங்கள் அந்த நீட்டுத் தலை முடி ரீச்சரின்ர மேன் எல்லோ“ என்று மற்றவர்கள் கேட்கும் அளவுக்கு முடி வளர்த்தி கொண்ட என் அம்மாவும் சீயாக்காய் தான் தன் முடி வளர்த்தியைத் தீர்மானிப்பதாக நம்புவார். ஆனால் சோப்புத் தட்டுப்பாடு பொதுப் பிரச்சனை ஆகி விட்டதே இப்போது.

இனி சோப்புக்கு மாற்று வழியைத் தேடினோம். எஞ்சியிருந்த சோப்புத் துண்டுகளைச் சேகரிக்கும் படலம் ஆரம்பமாகியது. சுரக்காயைக் காய வைத்து அதன் உள் எலும்புக் கூட்டை எடுத்தால் ஸ்பொன்ச் மாதிரி இருக்கும். அதற்குள் சோப்புத் தண்ணியைக் கரைத்து ஊற்றி வெது வெதுவாக்கி குளிக்கும் போது சோப்புப் போடுவது போலப் போட்டுத் தேய்த்துக் குளிப்போம். பனம் பழச் சாற்றை எடுத்து விட்டு முடியால் சூழப்பட்ட கிழவன் போல இருக்கும் அந்தப் பனங் கொட்டையைத் தேய்த்துக் குளிப்போரும் உண்டு. பனஞ்சாற்றை எடுத்து உடுப்புத் தோய்ப்போம். பூ, செவ்வரத்தம் இலையை ஊறப்போட்டு அது நொய்ந்து ஒரு நெகிழ் கலவையாக வந்த பின்னர் அதைப் போட்டு உரஞ்சிக் குளிப்போரும் உண்டு. ஒன்றல்ல இரண்டல்ல மாதக் கணக்காக, வருடக் கணக்காக இந்த சோப்பு இல்லாப் போராட்டம் நிகழ்ந்தது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் கொழும்பில் இருந்து வரும் லக்ஸ், ரெக்ஸோனா சோப் வகைகள் தமிழகத்துக்கு வள்ளம் வழியாக நாடு கடத்தப்படும். இங்கிருந்து வள்ளத்தில் போவோர் வெள்ளிக்கிழமை தூத்துக்குடி, இராமேஸ்வரத்தில் இறங்கிப் புதுப் படம் பார்த்து விட்டு அங்கிருந்து பட்டு உற்பத்திப் பொருட்களோடு ஈழத் தமிழகம் வந்து சேருவர். இந்த நிலை தொண்ணூறுகளில் மாறியது. தமிழகத்தில் இருந்து மைசூர் சந்தன சோப் கடத்தப்பட்டுக் கொள்ளை விலையில் விற்ற காலமும் உண்டு. அந்த நேரம் யாழ்ப்பாணத்தில் CIMA கற்கை நெறி ஆரம்பித்திருந்தது. அந்த வகுப்பில் என்னோடு படித்தவர் எங்களை விடப் பல வயது மூத்தவர். எங்கட செற்றில் இருந்து பம்பலடிச்சுக் கொண்டு கொட்டம் போட்டுக் கொண்டிருப்பார்.

“அண்ணை என்ன தொழில் செய்யுறீங்கள்?“ என்று கேட்டால் “ஸ்மக்ளிங்“ என்று சிரிப்போடு சொல்லுவார். அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ தெரியவில்லை.

மில்க்வைற் கனகராசா எங்கள் அம்மாவின் சிறிய தந்தையோடும், அயலவர் அண்ணா கோப்பி நடராசா மாமாவுடனும் நட்புடன் இருந்தவர். நான் அவுஸ்திரேலிய வதிவிட உரிமை பெறுவதற்கான நற்சான்றிதழ் கடிதத்தை 1995 இடப்பெயர்வுச் சூழலிலும் அனுப்பி வைத்தவர். ஆனால் இந்தப் போர் எல்லாரையும் மாற்றி உருக்குலைத்து விட்டது. தொழிலில் முடங்கியிருந்தாலும் மில்க்வைற் தொழிலகத்தில் வேலை செய்தோருக்குத் தொடர்ந்து பணம் கொடுத்து நொடித்து விட்டார். இன்று “மில்க்வைற்“ கனகராசா என்ற பெயர் பால் வெள்ளை போல அந்தக் காலத்தவர் நினைவுகளில் நுரைக்கின்றார்.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனி ஹப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்காதேவி அம்பாள் தேர்!



படங்கள் : மதன் சிவா

யேர்மனி வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்காதேவி அம்பாள் ஆலயத்தில் 14.05.2022 அன்று மிகச்சிறப்பாகத் தேர்த்திருவிழா இடம்பெற்றது. கோவிட்கால இடர்களின் பின், மீண்டும் இயல்பு வாழ்வில் நம்பிக்கைத் துளிர் விடும் திருவிழாவாக அமைந்தது சிறப்பு.

### அரை நூற்றாண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பணிபுரியும் நட்பின் நாயகன்

## ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களை வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது



கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் நண்பர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவையைப் பாராட்டியும், இம்மாதம் உதயன் இலங்கைச் சிறப்பிதழை வெளியிடும் (29-05-2022) தருணம் அறிந்தும் மகிழ்கின்றோம்.

கனடாவில் ஒரு வாரப்பத்திரிகையை 26 ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல, ஆரம்ப-காலத்தில் ஒரு செய்தியை முதலில் ரைப் செய்து பின் அதை வெட்டி ஒட்டித்தான் பிரதிகள் எடுக்க வேண்டியிருந்தது. அவரது மனைவி இந்த அரிய பணியை அழகாகச் செய்வதை அன்று கண்டு உள்ளேன்.

குடும்பத்தில் பூரண ஆதரவின்றி இந்த வெற்றி சாத்தியமாகாது, என்பது எனது அனுபவ உண்மை. எனவே அவர்குடும் பத்தினர்க்கும் நண்பார்களுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும்

அன்புடன்

வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன். யேர்மனி. 23.05.2022

படத்தில்: கவிஞர்.வி.கந்தவனம், உதயன் பிரதம ஆசிரியர்.நட்பின்நாயகன் ஆர்.என்.லோகேந்திரலிங்கம்.வெற்றி மணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன, கலைக்கதிர்கதிர் துரைசிங்கம் ஆகியோர்.







Dear customers , Warehouse office moved to new location. Address below,
Unit K5, Metropolitan Park, Field Way Greenford ,Middx UB6 8UN

02 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## காப்பி அடித்து கோப்பி போட...

அது (McDoald's) மைக்டோனால்ஸ், பக்கத்து கதவைத் திறந்தால், அது (Burger King) பேகர்கிங். ஆனால் இரண்டு கடையிலும் சனம் வழிகிறது, இன்று இச்செயல் அநாகரீக மானது அல்ல!

தன் நிறுவனத்தின் தனித்துவம் மீது ஒவ்வொருவரும் கொண்டுள்ள நம்பிக்கைதான் இன்று அவர்களது வியாபார சக்தியாகவும், யுக்தியாகவும் உள்ளது.

ஒப்பீடுகள் தேவைதான் அது நாம் எங்கு எந்த நிலையில் நிற்கிறோம் என்பதனை அறிவதற்கு மட்டுமே அன்றி, அவர்கள் போல் நாமும் செய்ய வேண்டும் என்பதற்கு அல்ல.

காப்பி அடித்துக் கோப்பி போடவேண்டாம். போடும் கோப்பி,அது உங்களதாக இருக்கட்டும். இது எந்த துறை யாக இருந்தாலும் பொருந்தும்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு பாலை வீடு...

பயணித்து அங்கு நாடக மேடையேற்றம் முடிந்த கையுடன் மறுநாள் பேராதனைக்குப் பயணம் செய்ததெல்லாம் மறக்க முடியாத அனுபவங்கள். நாங்கள் நிறைய இளம்பெண்கள்.

அத்தோடு மேடை உதவிக்காக இளைஞர்களும் வந்தார்கள். உற்சாகத்திற்குக் குறைவிருக்கவில்லை. இதேவேளை முதல் முதலாக வீட்டில் பெற்றோரை விட்டுத் தனியே நீண்ட பயணம் வந்திருந்த ஓரிரு நடிகைகள் வீட்டு நினைவில் கொஞ்சம் சஞ்சலப்பட்டதும் அவர்களுக்கு நான் ஆறுதல் கூறியதும் நினைப்பு வருகிறது. 'ஒரு பாலை வீடு' நாடகம் இலங்கையில் 6 தடவைகள் மேடையேற்றப்பட்டு ஒரு வெற்றி நாடகமாக அமைந்தது.

மிகுதி அடுத்த இதழில்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கப்பிங் தெரபி...

எந்த மருத்துவத்தைப் போலவும் கப்பிங் தெரபியால் சில அசௌகர்யங்கள் ஏற்படலாம். வேதனை, புண்ணாதல். கிருமித்தொற்று போன்றை ஏற்பட வாய்ப்புண்டு.

இருந்தபோதும் சிலர் இதை நம்பிக்கையோடு செய்து பயன்பெற்றதாக கூறுகிறார்கள். பிக்பாஸ் புகழ் ஓவியா ஒரு உதாரணம். கப்பிங் தெரபி என்பது ஒரு மாற்று மருத்துவமுறை (Alternative medicine). மேலைத்தேய மருத்துவம், சித்த மருத்துவம், ஆயுள்வேத மருத்துவம் போன்ற முழுமையான மருத்துவ முறை அன்று. நான் இதை மருத்துவக் கல்வியாகப்



பயின்றதும் இல்லை சிகிச்சை முறையாக பயன்படுத்தியதும் இல்லை. மேற் கூறிய விடைகள் அனைத்தும் எனது தேடுதலில் பெறப்பட்டவை. உறுதிப்படுத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் தகவல்கள் அடிப்படையிலேயே தரப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நமது பிரபஞ்சத்திற்கு அழிவு உண்டா?

மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கும், பிற உயிரினங்கள் அனைத்தும் அழிந்திருக்கும். 1.6 பில்லியன் ஆண்டுகளில் அதிக வெப்பநிலையைப் பொறுத்துக்கொள்ளும் உயிரினங்கள்கூட வாழ்வது கடினமாகி விடும். 3.5 பில்லியன் ஆண்டுகளில் பூமியின் மேற்பரப்பு வீனஸ் கோளின் மேற்பரப்பினை ஒத்திருக்கும்.

தற்போதிலிருந்து 7.9 பில்லியன் ஆண்டுகளில் மெர்குரி, வீனஸ் மற்றும் பூமி ஆகிய கிரகங்களைச் சூரியன் உள்ளிழுத்துக்கொள்ளும். இப்படி நம்மையே உள்வாங்கிய சூரியன் 8 பில்லியன் ஆண்டுகளில்



தற்போதுள்ள நிறையில் பாதி நிறையுடைய வெள்ளைநிற சிறிய விண்மீனாக மாறி விடும். 14.4 பில்லியன் ஆண்டுகளில் சூரியன் மனிதனின் கண்ணுக்கே புலப்படாத அளவிற்குச் சிறிய விண்மீனாகியிருக்கும்.

இப்படி அடுத்து வரும் நூற்றாண்டுகளுக்குப் பிரபஞ்சம் என்னவாகும் என வானவியல் மற்றும் பிரபஞ்சத்தின் அறிஞர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை வைத்தாலும், இவையனைத்தும் கணிப்புக்களே மட்டும் தான். என்ன நடக்கும் என்பதைப் பிரபஞ்சமே முடிவு செய்யும்.

மேற்கூறிய விஷயங்கள் நடைபெறவில்லையென்றாலும் 17 பில்லியன் ஆண்டுகளில் பெரிய அழிவு பிரபஞ்சத்திற்கு ஏற்படும், அதுவும் அடிப்படை பொருட்களுக்கு இடைப்பட்ட ஈர்ப்பு மற்றும் விலக்கு விசைகளுக்கு இயற்பியலின்படி நடைபெறும் எனக்கூடக் கருதப்படுகிறது. பிரியும்.

100 பில்லியன் ஆண்டுகளில் பிரபஞ்சம் முதன் முதலில் இருந்த நிலைக்கே செல்ல வழிவகுக்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பிரபஞ்சத்தின் அனைத்துமே செயல்படாமல் இருக்கும் நிலைகூட வரலாம், அப்போது நட்சத்திரங்கள் உருவாகாது, எவ்வித வெப்ப ஆற்றல் மாறுபாடுகளும் ஏற்படாது, எவ்வித ஈர்ப்பு அல்லது விலக்கு விசைகளும் இருக்காது. அவ்வளவு தான பிரபஞ்சத்தின் கதை அத்துடன் முடிந்துவிடும்.





# காற்றுக்கு வேலி அமைப்பது நல்லதல்ல

அந்தரத்தில் சுழன்று கொண்டிருக்கும் இந்த பூமிப்பந்தில் கட்டணம், வரி வசூலிப்பு இன்றி பிறிதொரு கண்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பிராண வாயுவை கூட நாம் இலவசமாக சுவாசித்துக் கொண்டிருக்கின்றோம். குடிநீரும் பணம் கொடுத்து வாங்கும் நிலை வந்து விட்டது. அப்படி இருக்க இப்பூமி சுழல்வதால் இக்காற்று உலகெங்கும் ஓடி உலவுகின்றது. அமேசான் பெருங்காடு அழிந்து விட்டாலே உலகில் பிராணவாயு தட்டுப்பாடு நிலவும் என்றளவிற்கு பசுமையின் பற்றாக்குறை ஏனைய பகுதிகளில் நிலவுகிறது.

இங்கு பார்க்க இருப்பது பசுமை புரட்சியை பற்றியதல்ல. அதனைப்பற்றி பல்லாயிரம் முறை பலரால் கூறப்பட்டு விட்டது. தற்போது நவநாகரிகம் எனும் மாயையில் நவீன கட்டுமானங்கள் மேல் உள்ள மடத்தனம், தொழில்நுட்பங்களின் பால் உள்ள குருட்டுத்தன நம்பிக்கை, இயற்கையுடனான குறைந்து செல்லும் தொடர்பு நிலை என்பன பற்றி பார்ப்போம்.

முன்பு ஒரு வீடு கட்டுவதென்றால் அதற்காக மனையடி விஞ்ஞானம் என்றும், வாஸ்த்து என்றும் பல முறைகள் உண்டு, சாதாரணமாக ஒரு நாய் நிலத்தில் படுத்து உறங்க போகிறது என்றால் கூட நடந்து வந்து அப்படியே படுத்து உறங்கி விடாது. கவனித்து பார்த்தால் தெரியும் நின்ற இடத்தில் சுழன்று காற்றை கவனிக்கும். பின் அதற்கேற்ற திசையில் தலைப்பக்கம் உள்ளவாறு வைத்து உறங்கும். இந்த கணிப்பின் வல்லமை இயல்பாகவே பிராணிகளிடம் உண்டு. மனிதன் இயற்கையோடு ஒன்றியிருந்த காலத்தில் இத்திறமை பெற்றிருந்தான். அக்காலத்தின் குறிப்பேடுகளின் படி வீட்டின் முன்புறம் வழியாக உட்புகும் பிராண வாயு வீடு முழுக்க நிறைந்து அங்குள்ள அசுத்தக் காற்றையெல்லாம் அடித்துத் தள்ளியபடி பின்புறமாக வெளியேற வேண்டும். இதற்கு ஏற்றாற் போலவே நெருப்பின் உபயோகத்திற்கு ஏற்ற இடத்தில் சமையலறையும், அமைதியான சுவாசத்துக்கு ஏற்ற இடத்தில் படுக்கையறையும், வடக்குத்திசை காந்தப்புல ஈர்ப்பு விசையால் மூளை பாதிக்காத இடத்தில் தலைவைத்து படுக்காதபடி படுக்கை விரிப்பும் அமைக்கப்படும்.

உடலில் நிகழும் சமநிலையானது உடலுக்கு வெளியே உள்ள சமநிலையோடு அனுசரித்து போகும்போதுதான் அங்கு சரியான சமநிலை நிலவும், அதற்கு எதிரான செயற்கை தடைகள் மூலம் மனிதன் தன்னை சிறைபடுத்தி கொள்ளும் போது அந்த நிலையை சமநிலை படுத்தவே இயற்கை போராடும். இந்த போராட்டத்தின் வெற்றி இயற்கைக்கே என்றாலும் இதனால் ஏற்படும் பக்க விளைவுகள் மனிதர்களை வெகுவாக பாதிக்கவே செய்கின்றது. குறிப்பாக மரத்தோப்புகளினூடே நடந்து செல்லும்போதே புத்துணர்வு ஏற்பட்டு விடுகிறது. குளிர்ந்த நீரில் நீராடும் போதும் உற்சாகம் பிறக்கிறது.

மொத்த பிரபஞ்சமும் குறிப்பிட்ட சக்தி நிலையிலேயே இயங்குகின்றது. வெற்றுக் கண்ணுக்கு புலப்படாவிடினும் அதுவே உண்மையானது. பொதுவாக கடின வேலை செய்து சோர்ந்து விடுவதை விட ஏதாவது ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு பெரும் மக்கள் கூட்டத்திற்குள் மிருதுவாக அமர்ந்திருந்துவிட்டு வந்தால்கூட உடலில் அதிக சோர்வு இருக்கும். அங்கு தோன்றும் எண்ண அலைகளின் குப்பைகள், பெருமளவு சுவாசங்களில் வெளிச்செல்லும் கரியமிலவாயு, பல்வேறு தன்மையையுடையவர்கள் வெளிப்படுத்தும் சக்தி அலைகளின் தாக்கம், அதிக ஒலிகளின் அதிர்வலைகளால் உண்டாக்கப்படும் மூளைச்சோர்வு போன்றவையே வெளியேற்றி தூய்மைபடுத்த பட வேண்டிய அசுத்தங்கள் ஆகிவிடுகின்றன. வீட்டிற்கு வந்து ஒரு குளிர்ந்த நீரில் குளித்து விட்டாலே அந்த இயற்கை சக்தி தன்னால் இயன்றளவு அந்த அசுத்த அலைகளை வெளியேற்றி சுத்தப்படுத்தி புத்துணர்வை தரும். இது போலவே இயற்கை காற்றின் மூலமும் சுத்தப்படுத்த முடியும். ஆனால் இந்த சுத்தம் தூங்கும் போதும், விழித்திருக்கும் போதும் அன்றாடம் அவசியமானது.



கரிணி
(யேர்மனி)

உடல் ஒரு புல்லாங்குழல் போன்றதென்றே சொல்லலாம். புல்லாங்குழலின் துளைகளை அடைத்தால் காற்று உட்புகுதலும், வெளியேறுவதும்தடைபட்டு எப்படி நாதம் வராதோ அது போல இந்த உடலும் சரியான அளவில் காற்றை உள்ளெடுத்து அந்த வினாடியே உடலெங்கும் சக்தியாக பரவி இதயத்தால் வெளியேற்றப்படும் கழிவு இரத்தத்தில் உள்ள கரியமிலத்தை பிரித்து வெளிக்கொண்டுவந்து வெளிச்சுவாசமாக வெளியேற்றாவிட்டால் உடல் இனிய இசைக்கருவி போன்று செயல்படுவது கடினம். உணவு எவ்வாறு முக்கியமோ அதைவிட முக்கியமானது பிராணவாயு. காற்றை மட்டும் உண்டு வாழும் யோகிகளும் உண்டு. அழியா சக்தி தரக்கூடிய அமிர்தம் அதிகாலை இளம்காற்றில் நிறைவாக உண்டு எனப்படுகிறது.

ஓசோன் படலம் பூமிக்கு நெருக்கமாக அடர்த்தியாக உள்ள காலம் அதிகாலை. மார்கழி மற்றும் தை மாதங்களில் இத்தன்மை அதிகம் காணப்படுவதால் தான் அக்காலத்தில் இதிகாலை துயிலெழுந்து அமிர்தக்காற்றை நிறைவாக சுவாசிக்க வேண்டும் என பாவை நோன்புகள் ஏற்படுத்தப்பட்டன. எல்லா நாட்களிலும் யன்னல் கதவுகளையும் மூடிவிட்டு அதிகாலையில் வீட்டில் இன்னும் அசந்து தூங்குவதால் உயராற்றலை தரக்கூடிய இந்த அமிர்த காற்று கிடைக்க பெறாமலே போகிறது. மற்றும் அடைக்கப்பட்ட சூழலில் உள்ள கழிவு வாயுக்கள் பாதிப்பையும் உண்டுபண்ணும். எனவேதான் இக்கால வாழ்வியல் முறையினால் நோய் எதிர்ப்பாற்றல் மிக குறைவாக காணப்படுவதுடன் மனித ஆயுட்காலமும் குறைவடைந்து விட்டது.

இன்றைய வீட்டுமனை கட்டுமானத்தில் செயற்கை குளிரூட்டி உபயோகிக்க வேண்டும் எனவும், அந்த குளிர்ச்சி வெளியேறிவிடக் கூடாது என்பதற்காகவும் சிறு காற்றுப்புகும் துவாரங்கள் கூட இல்லாதபடி வீடுகள் அமைக்கப்படுகின்றன. முற்காலத்தில் யன்னல்கள் அமைத்தால்கூட உயரமாக மேற்பகுதியில் அழகிய பூக்கள் வடிவங்களையுடைய ஓட்டைக்கற்கள் வைத்து வீட்டினுள் சூரிய ஒளி, காற்று உட்புகுமாறு அமைத்திருப்பார்கள், சுத்தமான காற்று வீட்டினுள் நிறைவாக தழுவிச் செல்ல வேண்டும். அந்த நிறைவான காற்றை குளிர்சாதனம் வழங்கிவிடாது, மற்றும் மின்சாரத் தடை ஏற்படும் காலங்களில் இத்தகைய சூழலில் மின்விசிறி, காற்றுப்பதனி போன்றவையும் செயற்படாமல் போவதனால் அச்சூழலில் அதிக நேரம் தரித்து இருக்கும் போது உடல் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. சிறு கொசுக்களின் தொந்தரவுக்கு பயந்து யன்னல்களையும் அடைத்து எத்தனையோ இரசாயன கொசு விரட்டியை உபயோகித்து உள்ளே இருக்கும் சிறிதளவு காற்றினையும் விசமாக்கிவிடுவதனால் மூளை நரம்புகள் முதற்கொண்டு உடலின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் பக்க விளைவுகள் ஏற்படும். காற்று நன்றாக உள்வந்தால் வீட்டினுள் ஏற்படும் ஈரலிப்பு காய்ந்து போகும். இல்லாவிடில் பூஞ்சை பரவல் ஏற்படும். அதிக குளிர் தேசத்தில் வாழ்பவர்கள் வெப்பமாக்கியை பயன்படுத்தினாலும்கூட அடிக்கடி வெளிக்காற்று உள்ளே வந்து சுத்தம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

ஒவ்வொரு விடயங்களுக்குமான மாற்றுவழிகளைத் தேடும்போது அவை எவ்வித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாதபடி பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

28 ஆம் பக்கம் பார்க்க...

சிவமயம்

## பரத நாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழ்

அன்புடையீர்:-

ஜேர்மனி கிறீபில்ட் ஆடற்கலாலய அதிபரும் ஆசிரியருமான ஆடற்கலைமணி திருமதி. றெஜினி சத்தியகுமார் அவர் தம் புதல்வன் நாட்டிய கலாவித்தகர், நாட்டியச்சுடரொளி நிமலன் சத்தியகுமார் அவர்களின் மாணவியும் எமது புதல்வியுமான செல்வி சாகித்யா விஜயகுமாரன் அவர்களின் பரநாட்டிய அரங்கேற்றம் நடைபெற இரு குருவினர்களினதும் நல்லாசிகள் கிடைக்க பெற்று, ஆடலரசன் நடராஜப் பெருமானின் திருவருளும் கைகூடியுள்ளது.

காலம்: 11.06.2022 | நுழைவு: பி.பி. 14.30 மணி | ஆரம்பம்: பி.ப. 15.00 மணி

இடம்: Kulturhalle Vluyner Platz 1, 47506 Neukirchen, Deutschland

அத்தருணம் தாங்களும் குடும்பத்தினருடன் வருகை தந்து நிகழ்வினைச் சிறப்பித்து எம் செல்வியை வாழ்த்தி ஆசிர்வதிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் திரு. திருமதி விஜயகுமாரன் குடும்பம்.

தயவு செய்து உங்கள் வருகையை உறுதிப்படுத்தவும்.



13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஞாயிறு அது நன்று வாழ்க...

அமைக்குமாறு ஐயன் பாரதியின் கொள்ளுப்பேரன் இசை மேதை டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயாவிடம் விண்ணப்பித்தேன். சப்த பரியில் வலம் வரும் பரிதியை கருத்தில் கொண்டு ஏழு அட்சரம் கொண்ட திஸ்ர திருபுடை தளத்தில், சூரியகாந்தம் ராகத்தில் அவ்வுருப்படியை இயல் அழுகு ஜொலிக்க அமைத்தார். புஷ்பாஞ்சலியுடன் அலாரிப்பு என்னும் உருப்படி ஆடப் படுவது வழமை. எனவே இப்புஷ்பஞ்சாலி உடன் அமையும் அலரிப்பினை 7 மாத்திரைகள் கொண்ட மிஸ்ர விலோம சாபு தாளத்தில் அமைத்தேன். புஷ்பாஞ்சலியின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட “ ஞாயிறு அது நன்று வாழ்க “ என்ற அடி , அலாரிப்பின் இறுதி கோர்வையில் அமையப்பெற்றது இவ்வுருப்படிக்கு மேலும் அழகு சேர்த்தது.

அரிய மெய்ப்பொருளாகக் கிடைக்கும் பாரதியின் இயலுக்கு, பாரதியின் வழிவந்தோராய் திகழும் ராஜ்குமார் பாரதி ஐயா இசை அமைப்பதும், பாரதி பக்தையாய் அதனை நாட்டியத்தில் கொண்டுவருவதும் பாரதி அருளன்றிப் பிறிதில்லை. முத்தமிழால் பாரதியை ஆராதிக்க பெருவரம் பெற்றேன். ■

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காற்றுக்கு வேலி அமைப்பது...

உதாரணமாக யன்னல்களில் சிறிய துவாரங்களுடைய வலைகளை பொருத்திவிடுவதன் மூலம் யன்னல்களை திறந்து காற்று உட்புக அனுமதிப்பதோடு கொசுக்கள் வருவதை தடுக்கவும் முடியும். ஒரு வீட்டில் பல காற்று ஓட்டத்திற்கான பாதைகள் இருக்க வேண்டும்.

வீட்டிற்கு உபயோகமான மரங்களை வீட்டு வளாகத்தில் வளர்த்து குளிர்ச்சியான சூழலையும் பேணலாம். இயற்கையோடு நெருங்கிய வாழ்க்கைமுறையோடு அவற்றிலிருந்து தூரம் போகாதபடி கவனமாக காற்றோட்டமான இடங்களிலேயே உண்டு, உறங்கி வாழ்தலே உடல், மன ஆரோக்கியத்திற்கு என்றும் நன்மை பயக்கும் ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## குவேனியின் சாபம் இன்றும் ...

உடைந்து இறுதியில் சமுத்திரத்தில் மூழ்கட்டும் என்பதே, “தக்னிகா“ எனும் ஆறாவது சாபமானது இலங்கையில் அறிவீனமான இனம் தோன்றட்டும் என்பதாகும், ஏழாவது சாபமானது சூரியன், மழை, காற்று, கடல் மற்றும் நீர் என்பவற்றால் அனர்த்தங்கள் ஏற்படவேண்டும் என்பதே, குணமடைய முடியாததும் விரைவாக பரவக் கூடியதுமான நோய்களுக்கு எப்போதும் இலங்கை ஆளாகிக்கொண்டிருக்கட்டும் எனும் எட்டாவது சாபம், குவேனியின் இறுதி சாபம் என்னவென்றால், கடலில் மிதக்கும் மரக் குச்சி அலைகளுக்கு அகப்பட்டு இங்குமங்குமாக எந்தக் இலக்குமில்லாமல் இறுதியில் மூழ்கிவிடுவது போல எந்தக் கொள்கையும் இல்லாத மக்கள் இலங்கையில் உருவாகட்டும், அவர்கள் சிக்கி சீரழியட்டும் என்பதேயாகும்.

இலங்கை வரலாற்றைப் படிப்பவர்களுக்கு குவேனியின் சாபம் இன்றுவரை பலித்து வருவது தெரிய வரும். இலங்கையை ஆண்ட எந்த மன்னரும் இடையூறின்றி, நிம்மதியாக ஆட்சி செய்துவிட்டு மாண்டதில்லை. அவர்கள் அனைவருமே பீதியுடனும், போர்களுடனும், சதிகளை எதிர்கொண்டும்தான் ஆட்சி புரிய நேர்ந்தது. அது பண்டைய மன்னர்கள் தொடக்கம் இன்றைய நவீன அரசாங்கங்கள் வரை நீடிக்கின்றன என்பது கண்கூடு! மகா வம்சத்தின் (கிமு 543 கிபி 275) சிங்கள அரசர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் பலவீனமானவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்ததை மகாவம்சத்திலிருந்தே காணலாம். இந்த வம்சத்தின் 54 மன்னர்களில், 15 பேர் ஓர் ஆண்டிற்கும் குறைவாகவும், 30 பேர் நான்கு ஆண்டுகளுக்கு குறைவாகவும், 11 பேர் அரியணையில் இருந்து நீக்கப்பட்டனர், ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டனர், 13 பேர் போரில் கொல்லப்பட்டனர் மற்றும் 22 பேர் அவர்களின் வாரிசுகளால் கொல்லப்பட்டனர். தொடக்ககால சிங்கள அரசர்களின் இருண்ட அவலமான பதிவு அரியணைக்கான இடைவிடாத போராட்டம், சகோதரக் கொலைகள், சதிகள் மற்றும் உள் சண்டைகள் ஆகியன இடம் பெற்றன.

இன்று 73 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் இலங்கைத் தீவு வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாது ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷே வம்சம் அசிங்கப்பட்டு நிற்கிறது. நெருக்கடிகள் ஒன்றா இரண்டா? அவை வரிசையாக எழுந்து நிற்கின்றன. நிதித் தட்டுப்பாடு, உற்பத்தி வீழ்ச்சி, பண வீக்கம், கோவிட், விலைவாசி ஏற்றம், உயிர் காக்கும் மருந்துகள்,உணவுப்பொருட்கள் உற்பட அத்தியாவசிய பொருட்கள் இன்மை போன்ற நெருக்கடிகளை இலங்கை அரசாங்கம் எதிர் நோக்குகிறது.

குவேனியின்சாபம்ஒருபுறம்அவர்களைத் துரத்துகிறது என்றால்,இறுதியுத்தம் என்று குழந்தைகள் முதியவர்கள்,பெண்கள், ஆண்கள், என்று எந்த பாகுபாடும் இன்றி, முள்ளிவாய்காலில் இலங்கை அரசு கொண்டு குவித்தது, அன்று இறந்தவர்களது சாபம்,குவேனியின் சாபத்திற்கு மேலும் வேகம் அளிக்கிறதோ என எண்ண வைக்கிறது.

குவேனியின் சாபமும் முள்ளிவாய்காலில் பெற்ற சாபம் இலங்கை ஆட்சியாளர்களைத் துரத்துகிறது! அது சரி இந்தச் சாபம் தமிழர்களின் வாழ்வில் ஒரு நிரந்தரத் விடியலைக்கொண்டுவருமா? இது இன்று தமிழ்மக்கள் முன் எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும். ■

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## போதி மரம்

செத்தவீட்டுக்கு போய் வந்தா,தலைமயிர் வெட்டீட்டு வந்தா இல்லாட்டி பொம்பிளைகளை அந்த மூண்டு நாளும் அள்ள விட மாட்டினம். விளக்கீட்டில ஒரு பந்தம் வைக்கிறதில இருந்து ஐயர் தாற தீத்தம் கொண்டே ஊத்திற வரை அதுக்கு ஒரு மரியாதை இருந்தது.

தண்ணி அள்ள கிராமப் பக்கம் தான் கைப்பட்டை இல்லாட்டி துலா இருந்தது. நாலு மரம் நட்டு குறுக்கு மரம் போட்டு சரி பண்ணி துலா கட்டிறது. நட்ட பூவரசங்குத்தி முளைச்சு சிலவேளை மரமாயும் வளந்திடும். வைரமான பனை மரத்தை சீவி ரெண்டாப்பிளந்து நடுவில இருக்கிற சோத்தியை கோதி எடுத்து, ரெண்டையும் சேத்து கட்டை இறுக்கி,அடிபருத்தும் நுனி சிறுத்தும் இருக்க செய்யிற துலாவில சரியான இடம் பாத்து, வீட்டில வைக்கிற ஓட்டைக்கல்லு மாதிரி செவ்வக ஓட்டை வைச்சு குறுக்கு மரம் போட்டு துலாவை ஏத்தி விட அது காலத்துக்கும் இருக்கும். தென்னை எண்டால் அப்பிடியே சீவி வைக்ககலாம், பத்து வருசத்திக்கு அசையாம இருக்கும். துலாவின்டை அடியில கட்டிற கல்லு டங்கு டங்கு எண்ட அடிக்க சத்தம் வரும் எண்டதால ரயரையும் சேத்துக்கட்டிறதும் வழக்கம்.

ஆனால் நகரப்புறத்தில கப்பி தான் கூட. கப்பிக்கு electricity board ல ஆரும் தெரிஞ்சவை இருந்தா high voltage வயர் இழுக்கிற மாபிள் கப்பி கள்ளமா எடுத்துப் பூட்டிறது, இல்லாட்டி இரும்புக் கப்பிதான். கப்பிக்கயித்துக்கு மொத்தமான இளைக்கயிறு தான் நல்லம். நைலோன் கட்டினால் வாளி முடிச்சு நிக்காது அடிக்கடி வாளி கழண்டு கிணத்துக்க விழுந்திடும்,

பள்ளிக்குடத்தில வயல் கிணதுக்க குதிச்சு தான் நீந்தப் பழகினது எண்டு ஆரும் சொன்னதை கேட்டு உசுப்பாகி நானும் நீந்தப் போறன் எண்டு நல்லவேளை ஒரு நாளும் குதிக்கேல்லை. ஆனாலும் கள்ளமா கிணத்துக்க இறங்கினது நடந்தது. மழை காலத்தில நிரம்பிறதை எட்டிப் பாக்கிறது சந்தோசம், தண்ணியும் நிறம் மாறி மஞ்சள் நிறமாக இருக்கும். கையால அள்ளிக் குளிக்கலாம் எண்டு பாத்துக்கொண்டிருக்க தண்ணி வத்தத்தொடங்கீடும்.

வீட்டுக்ககிணறு தான் இப்பிடி இறைக்கிறது ஆனால் தோட்டத்திக்கு தண்ணி ஊர்வழிய சூத்திரத்தில மாடுகள் கட்டி, பட்டையில தான் இறைக்கிறது. வைரமாளிகை நாகலிங்கம் போடிற பனைமட்டை தொப்பியக் கவிட்டு விட்ட மாதிரித்தான் பட்டை இருக்கும். பனையோலையில கட்டிற பட்டை ஒழுகாம காலத்துக்கும் இருக்கும். பட்டையின்டை மூலைக்கு சாக்கு இல்லாட்டி பழைய ரயர் கட்டினால் அடி பட்டாலும் பிய்யாது. தோட்டத்திக்கு தண்ணி இறைக்க துலா மிதிக்கிறதும் இருந்தது, என்ன ரெண்டு பேர் தேவை. ஆனால் சூத்திர மாடு பழக்கி விட்டா ஆள் இல்லாமலே சுத்தும் தண்ணியும் இறைபடும். தகரம் வைச்சு செய்யிற இரும்புப்பட்டையும் இருந்தது. அடியில் இரண்டு தட்டு வாளி போய் மடார் எண்டு தண்ணீல முட்ட திறக்கும். உள்ள தண்ணீர் நிரம்பினாப்பிறகு மேல வர தண்ணிப்பாரத்திக்கு தட்டு மூடும். சரியா ஒண்டு தண்ணியை கவிட்டுக் கொட்ட மற்றது கோலும்.

ஏன் இதுக்கு சூத்திரம் எண்டு பேர் வந்தது எண்டு அறிய வெளிக்கிட்டு மாட்டை கட்டிற கயித்தின்டைநீளம், அது சுத்திற வட்டத்தின்டை ஆரை, மாடு சுத்திற வேகம் துலாவின்டை நீளம், அதில் தொங்கிற கயித்திண்டை நீளம் ,பட்டையின்டை அகலம், தட்டின்டை ஓட்டை அளவு மாட்டு வாலின்டை நீளம், எண்டு எல்லா Data வும் computer ல feed பண்ண அது Google application form ஒண்டைத்தருது NASA க்கு வரச்சொல்லி அந்த சூத்திரம் (equation ) என்ன எண்டு என்னைக்கேட்டு. இறைக்க இறைக்க வத்தாத அறிவு மாதிரி NASA காரனுக்கே விளங்காத அறிவைத் தந்த அந்த கிணத்தடி போதிமரம் இப்ப புத்தர் எல்லாம் Bathroom வழிய குளிக்கிற படியால் வெறுமையானது. ஆனாலும் அழிந்த அந்த அவதாரம் மீண்டும் திருப்பி வரும் எண்ட நம்பிக்கையில் காத்திருக்கத் தொடங்கியது. ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி... காலம் சென்ற மாஸ்டர்...

கதைக்கு ஓர் அழகுகொடுக்கும், குரலைப் பயன்படுத்திக் குயிலாகக் கூவுவார் நாயாகக் குரைப்பார், மாடாகக் கத்துவார் குழந்தைகள் மெய் மறந்து அவர் கதைகேட்பர்.இவ்வண்ணம் மிமிக்கிறி கலைஞனாக, நகைச்சுவைப் பேச்சாளனாக பகுத்தறிவு வாதியாக அரசியல் செயற் பாட்டாளனாக, சத்தியாக்கிரகியாக, நாடக நடிகனாக ’கூத்துக் கலைஞனாக வில்லுப்பாட்டுக் கலைஞனாக சிறுவர்கட்கான எழுத்தாளனாக கதைசொல்லியாக கார்ட்டூனிஸ்டாக பன்முகம் காட்டியவர் மாஸ்டர் சிவலிங்கம் அவரது இழப்பு துயரத்திற்குரியதன்று. அவர் வாழ்வு கொண்டாட் டத்திற்குரியது,அவர் வாழ்வைக் கொண்டாடுவோம் அக்கொண்டாட்டம் பல மட்டங்களில் நிகழட்டும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி... தன்னைப் பலப்படுத்தும்...

காலி முகத்திடல் போராட்டத்தை ரணில் பயன்படுத்திவருகின்றார் என்பதும் தெரிகின்றது. அதே வேளையில் இன்னும் 11 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ள நிலையில், சஜித்தும், மைத்திரியும் தமது அணியிலிருந்து இன்னும் எத்தனை பேர் பல்டி அடிப்பார்க்கள் என கண்களுக்குள் எண்ணெய் விட்டு பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த இடத்தில் கோட்டாபய ராஜபக்சவின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுகின்றது. கோட்டாபய பதவியை விட்டு ஓடும் ஒருவராகத் தெரியவில்லை. தமையனாரின் மஹிந்த ராஜபக்சவின் பிரதமர் பதவியைப் பலியெடுத்து தன்னை ஓரளவுக்கு தற்பாதுகாத்துக்கொள்ள அவர் முற்பட்டிருக்கின்றார். ஆனால், கோட்டா வீட்டுக்குச் செல்லும் வரை போராட்டம் ஓயாது என கோட்டா கோகமவில் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் இளைஞர்கள் உறுதியாகவுள்ளாடகள். அதேவேளையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை பிணை எடுக்க முன்வந்திருக்கும் சில நாடுகளும் அமைப்புக்களும் கூட கோட்டாபய வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதைத்தான் நிபந்தனையாக முன்வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின்படி ஜனாதிபதி ராஜினாமா செய்தால் பிரதமரே ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும். ஜனாதிபதிப் பதவி என்பது ரணிலின் கனவுகளில் ஒன்றுதான். ஆனால், ரணில் தற்போது நிதானமாக காய்நகர்த்துவதற்கு காரணம் உள்ளது. அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது, 20 ஆவது திருத்தத்தில் உள்ளவற்றை நீக்கி 19 ஐ வலுப்படுத்துவதுதான் இதன்நோக்கம். இதனை மற்றொருவகையில் சொன்னால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் வெட்டிக்குறைக்கப்பட்டு அவர் வெறும் சம்பிரதாயபூர்வமான ஜனாதிபதியாக மாற்றப்பட்டுவிடுவார். இதற்கான திருத்தம் அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காலிமுகத் திடலில் போராடும் இளைஞர்களின் கோரிக்கைகளில் இதுவும் முக்கியமானது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நாடு தழுவிய ரிதியில் மக்களின் குரலாக ஒலிக்கின்றது, அதிலிருந்து யாரும் பின்வாங்க முடியாது,

ரணில் விக்கிரமசிங்க அவசரப்பட்டு கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்பினால், அடுத்த கட்ட நகர்வில் அதிகாரங்கள் எதுவுமற்ற ஒரு ஜனாதிபதியாக அவர் மாற வேண்டியது தவிர்க்கமுடியாததாகிவிடலாம். ஆக, தற்போதுள்ள அரசியல் கள நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கும் போது அரசியலமைப்பை மாற்றிய பின்னர் அதிகாரம் மிக்க பிரதமரவதுதான் அவரது கனவாக இருக்கும். அவருக்குத் தேவையானதும் அதுதான். ஜனாதிபதிப் பதவிக்கு அவசரப்பட்டு ஒன்றுமில்லாமல் போய்விடலாம் என்ற அச்சம் அவருக்குள்ளது. அதனால், புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்வரையில் கோட்டாபயவைப் பாதுகாக்க ரணில் முற்படுவார் என்பதை எதிர்பார்க்கலாம். அதே வேளையில் தன்னைப்பலப்படுத்துவதற்கான உபாயங்களையும் அவர் முன்னெடுக்கின்றார். அது சஜித் அணியைப் பலவீனப்படுத்துவதாகவும் அமையலாம்.











விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## சுகாதாரச் செய்திச் சிதறல்கள்:



# யேர்மனியில் இன்றும் கோரோனா தோற்று நோயை 14 வீதமான மக்கள் நம்பவில்லையாம்

**இளையவர்கள் மத்தியில் புகைத்தல் பழக்கம் குறைந்துவருகிறதா?**

★குழந்தைகள் சுகதேகிகளாக வாழ்வதற்கு 180 நாடுகளில் எடுக்கப்பட்ட கணிப்பில் யேர்மனி 14 வது இடத்தில் காணப்படுவதாக உலக சுகாதார நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

★கொரோனா தொற்று நோயை இன்றும் யேர்மனியில் 14 வீதமான மக்கள் நம்பவில்லையாம் இந்த நோய்க்கு எதிரானவர்களாகவே காணப்படுகிறார்களாம்.

★உலகில் ஒரு மனிதன் 70 வயதுவரை வாழ்கிறார் என்று கணித்தால் அவரது இதயம் 2.5 மில்லியன் தடவைகள் துடிப்பதாக யேர்மனிய இதய வைத்தியப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

உலகில் தற்போது வாழும் மக்களில் 30 வீதம்பேர் கண் பார்வைப் பிரச்சனைகளுடன் வாழ்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

★உலகில் பிறக்கும் குழந்தைகளில் 64 வீதமான குழந்தைகள் தமது தாயை முகர்ந்து மணந்து கண்டுபிடிக்கிறார்கள் என சர்வதேச சிறுவர் தாபனம் அறிவித்துள்ளது.

உலகில் வாழும் 3 – 6 வயதுக் குழந்தைகளில் 90 வீதம்பேர் நாளாந்தம் வீடியோ பார்க்கிறார்கள் என்றும் இதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படுவதாக உலக சுகாதார தாபனம் எச்சரித்துள்ளது.

உலகில் தற்போது சராசரி நீண்ட ஆயுட்காலம் வாழும் மனிதர்களின் நாடுகளில் முதல் மூன்று இடங்களையும் வகிக்கும் நாடுகளின் விபரத்தை உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது. அதன்படி..

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| கொங்கொங் (Hongkong) | 82 வயது | 88 வயது |
| சன் மெரினோ (San Marino) | 82 வயது | 87 வயது |
| லிஸ்ரைன்ரைன் (Liechtenstein) | 82 வயது | 86 வயது |

★உலகில் வாழும் 12 – 17 வயதிற்குட்டவர்களிடையே புகைத்தல் பழக்கம் குறைந்து வருவதாக உலக புற்றுநோய் தடுப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விரல்களுக்கு இடையில் சிகரெட் பிடித்தால்தொலைபேசிக்குள் நோண்டமுடியாமல் இருப்பதும் ஒரு காரணமாக இருக்குமோ? இதை ஆண்டு ரீதியில் நோக்கினால்..

**1980ம் ஆண்டில் -52 வீதம் - 1990ம் ஆண்டில் -55 வீதம்**
**2000ம் ஆண்டில் -40 வீதம் - 2010ம் ஆண்டில் -70 வீதம்**
**2020ம் ஆண்டில் -85 வீதம் ஆகக் குறைவடைந்திருப்பது நல்ல செய்தியாகும்.**







# யேர்மனி ஹம் காமாட்சி அம்பாள் ஆலய கலாச்சார விழா

24.04.2022 அன்று ஹம் காமாட்சிஅம்பாள் ஆலய கலாச்சார மண்டபத்தில் இரண்டாம் நாள் கலாச்சார நிகழ்வுகள் ஆலய ஆதீனகர்த்தா பக்குவத்திருமணி சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள், துணைவியார் மதிவாணிஅம்மாவும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். வளர்ந்துவரும் யேர்மனி தவில் இளம் கலைஞர்கள் திலக்சன் கணேசலிங்கம்,ஜெருசன் மணிவேந்தன், தனுஸ் சுரேந்திரன் ஆகியோரின் தனித்தவில் ஆவர்தனதுடன் ஆரம்பமாகியது.



தொடர்ந்து கலை நிகழ்ச்சியில் கௌசிகா மணிவேந்தன், அனுஸ்கா கருணைராயன் இணைந்து மாடுமேய்க்கும் கண்ணே என்ற பாடலுக்கு நடனமாடி சபையோரின் கரகோசத்தைப் பெற்றனர்.

அத்துடன் பாட்டு வயலின் கச்சேரியும் நடைபெற்றதுடன். சிறந்த அறிவிப்பாளர் சகநாயகன் சக்திவேல் அவர்கள் கலாச்சார நிகழ்விலும் மற்றும் நடன நிகழ்சியிலிலும் பங்குபற்றிய சிறுமிகளை வாழ்த்தியும், பாரதியாரின் பக்தி உடையார் காரியத்தில் பதறார் என்ற பாடல் வரியை அடியாக வைத்து ஹம் காமாட்சி–அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பாஸ்கர குருக்களையும் அவர் துணைவியாரையும் அவர்களின் ஒப்பற்ற உழைப்பையும், சமயப் பற்றினையும் பாராட்டி வாழ்த்தினார். நிகழ்ச்சிகளை அழகாக செல்வராஜா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

**படங்கள், செய்தி: ஆன்மிகத்தென்றல் த.புவனேந்திரன்**



# வெற்றிமணியின் இதய அஞ்சலி!

## தியாகத்தாய்!

## திருமதி.சிவா தியாகராஜா (சிவகாமசுந்தரி)

அவர்களின் மறைவிற்கு வெற்றிமணியின் அஞ்சலி!

பிறப்பு 23.04.1934 (புலோலி –பருத்தித்துறை) – இறப்பு 18.05.2022 – (யேர்மனி)

பல இடிதாங்கிய மடி ஒன்று நாம் கடந்துவந்த காலத்தை படிப்பதற்கும்.அவற்றை எதிர்கால சந்ததியினர் அறிவதற் குமான ஒரு சிறந்த படைப்பான பெருநினைவின் சிறு துளிகள் எனும் நூலைத்தந்த, திருமதி.சிவா தியாகராஜா. (சிவகாமசுந்தரி) மறைந்தார்!. மூன்று பிள்ளைகளை ஈழவிடுதலைப் போராட்டத்தில் பறிகொடுத்தவர், பிரபல எழுத்தாளர் திருமதி சந்திரவதனா செல்வகுமாரனின் தாயாரும், வெற்றிமணியின் நீண்டகால வாசகியுமான அன்னாரின் மறைவிற்கு, வெற்றிமணி பத்திரிகையின் வாசகர்கள், எழுத்தாளர்கள்,சார்பில் அன்னாருக்கு அஞ்சலி செய்கின்றோம்.

வெற்றிமணி அன்னாருக்கு இதய அஞ்சலி செய்கிறது.

# ஆடியில்: 'அந்தகன்'



நீண்ட இடைவேளைக்கு பின்னர் பிரசாந்த் நடிப்பில் அவரது தந்தை தியாகராஜன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'அந்தகன்', இந்த படத்தில் கார்த்திக், யோகிபாபு வனிதா விஜயகுமார் உள்பட பலர் நடித்துள்ளனர்.

சந்தோஷ் நாராயணன் இசையில் உருவாகியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த படத்தின் 'அந்தகன்' வெளியீட்டு உரிமையை பிரபல தயாரிப்பாளர் கலைப்புலி தாணு பெற்றுள்ளார்.

இந்த நிலையில் இந்த படத்தின் புதிய போஸ்டர் வெளியாகி உள்ளது. மேலும் இந்த படம் ஜூலை மாதம் முதலாம் திகதி வெளியாக அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.



# பெண்களை மையப்படுத்தும் திரைப்படங்கள் எங்கே?




பெண்களை முதன்மைப்படுத்தும் திரைப்படம் அரிதினும் அரிதாக வெளிவருகிறது. அப்படியிருக்க அதுபற்றிய சொல்லாடலும் தமிழ்ச் சூழலில் அரிதாகவே இருக்கிறது. ஆனால் இந்திப் பட உலகில் பெண்களை முதன்மைப்படுத்தும் பல படங்கள் தயாராகி வருகின்றன. தமிழில் மட்டும் ஏன் இது நடப்பதில்லை? இந்தக் கேள்விக்கான பதிலைப் பார்க்கும் முன், தமிழில் வெற்றி கண்ட, பெண்களை மையப்படுத்திய படங்களைப் பற்றி பார்ப்போம்.

## ஒரு சாதனைப் பட்டியல்

1938-ல் கே.சுப்ரமணியத்தின் சேவாசதனம் என்ற படம் தொடங்கி,சகுந்தலா, கண்ணகி,மீரா,மணமகள்,அவ்வையார், அடுத்த வீட்டு பெண்,கொஞ்சும் சலங்கை, அன்னை, நானும் ஒரு பெண்,வெண்ணிற ஆடை,இதய கமலம்,சித்தி, எங்கிருந்தோ வந்தாள், வெகுளி பெண், அரங்கேற்றம், சூரியகாந்தி, அவள் ஒரு தொடர்கதை, அவளும் பெண் தானே, அன்னக்கிளி, பத்ரகாளி, அவர்கள், அவள் அப்படிதான் என்று கருப்பு வெள்ளை காலத்தில் ஒரு சாதனைப் பட்டியலே போடலாம். சினிமா வண்ணம் பூசிக் கொண்ட பிறகு, நீயா, தண்ணீர் தண்ணீர், அச்சமில்லை அச்சமில்லை, அக்னி சாட்சி, விதி, புதுமைப் பெண், சம்சாரம் அது மின்சாரம், பூவே பூச்சுடவா, சிந்து பைரவி, ஒரே ஒரு கிராமத்திலே என பல படங்கள் 1990 வரை பெண்களை மையப்படுத்தி வந்தன. இந்த நிலை 1991 முதல் மாறத் தொடங்கி, உன்னிடத்தில் என்னை கொடுத்தேன், மிருகம்,பூ, ஆரோஹணம் என வெகுசில படங்களே அவ்வாறு பெண்களை மையப்படுத்தின. கடந்த 20 வருடங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன?

## தொலைக்காட்சியின் ஆட்சி

தனியார் தொலைக்காட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டவுடன் பெண்களின் அனேக நேரங்களை தொலைக்காட்சித் தொடர்கள் எடுத்துக்கொண்டன.இதனால்



பெண்கள் திரையரங்குகளுக்கு வருவது குறைந்துவிட்டது.மாலையில் பெண்கள் தொலைக்காட்சித் தொடர்களிலும்,மற்றும் உள்ள வீட்டு, அலுவலக வேலைகளிலும் பிஸியாக இருப்பதால், சினிமா அவர்களுக்கு இரண்டாம் பட்சமாகிறது. பெரிய நடிகர்கள் நடித்த,அல்லது எதிர்பார்ப்பை உருவாக்கும் படங்களை வார இறுதியில் மட்டுமே பார்க்க வருகிறார்கள்.

கோ.தனஞ்ஜெயன்



# விஜய்க்கு எழுதிய கதையில் விக்ரம்

பொன்னியின் செல்வன், கோப்ரா படங்களில் நடித்துள்ள விக்ரம் அடுத்தபடியாக பா.ரஞ்சித் இயக்கும் மைதானம் என்ற தனது 61ஆவது படத்தில் நடிக்கப் போகிறார். இந்த படத்தை ஸ்டுடியோகிரீன் நிறுவனம் தயாரிக்கிறது.

இந்த படம் குறித்து ஒரு பேட்டியில் பா.ரஞ்சித் கூறுகையில், விஜய்க்காக ஒரு மேஜிக்கல் கதையை எழுதி வந்தேன். அந்த கதையை பேர்ட்மேன் பட பாணியில் இயக்க திட்டமிட்டிருந்தேன். அப்படி விஜய்க்காக உருவாக்கிய அந்த கதையை தான் இப்போது விக்ரமை வைத்து இயக்கப்போகிறேன் என்று தெரிவித்திருககிறார்.

# 'திருச்சிற்றம்பலம்' வருகிறார்

மாறன் திரைப்படத்திற்குப் பின் இயக்குநர் மித்ரன் ஜவகர் இயக்கத்தில் வெளியாக இருக்கும் தனுஷ் திரைப்படமான 'திருச்சிற்றம்பலம்' வெளீயீடு குறித்து அப்படத்தின் வெளியீட்டு உரிமையைக் கைப்பற்றிய 'ரெட் ஜெயண்ட் மூவிஸ்' உரிமையாளரனான உதயநிதி ஸ்டாலினிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த உதயநிதி 'வருகிற ஜூலை 1 ஆம் திகதி திருச்சிற்றம்பலம் படத்தை திரைக்குக் கொண்டு வரும் முயற்சியில் இருக்கிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.சன் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் தனுஷ் உடன் ராஷி கண்ணா, நித்யா மேனன், பிரியா பவானி சங்கர் உள்ளிடோர் நடித்துள்ளனர்.









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
திருமண பட்டுப்புடவைகள்
புத்தம் புதிய டிசைன்களில்
மங்கையர் மனங்கவரும்
சேலைகள் சிறுவர்களுக்கான
ஆடைகள், பஞ்சாபிகள்,
குர்த்தாக்கள், இன்னும்
இமிற்றேசன் நகைகள்
அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று
மகிழ நாடுங்கள்.
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria
VALUTRANS
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart தனில்...
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
சிறப்பு
விலையில்
அழகிய
சேலைகள்
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


செல்வராஜா
SELVARAJA GOLD HOUSE
நகைகள் அனைத்தும்
நம்பமுடியாத விலைக்கழிவில்
162 b Mitcham road | London | sw 17 9NJ
Tel: 0208 767 3795 | 078 25 005 269


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய
இடத்தில்!!!
புதிய
பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696 | Fax: 0231/8602698